ஹரிச்சந்திரன்

(நாடகம்)

प्रज्ञानं ब्रह्म

இயற்றியவர்
ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஹரிச்சந்திரன்

(நாடகம்)

இயற்றியவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை - 639 115 எலமனூர் ஸ்டேஷன்
திருச்சி ஜில்லா.
1982

தபோவனத் தொடர் 78

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது

விலை ரூ. 2-00

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

ஹரிச்சந்திரன்

காட்சி 1

இடம்: தேவேந்திரனுடைய தர்பார்

(தர்பாருக்கு வசிஷ்டரும் விஸ்வாமித்திர முனிவரும் வருகிறார்கள்.)

வசிஷ்டர்: தேவராஜா, உன்னைக் காணுதல் பொருட்டு நாங்கள் இருவரும் பூலோகத்திலிருந்து உனது லோகத்திற்கு வந்துள்ளோம். என் பெயர் வசிஷ்டர். இவர் பெயர் விசுவாமித்திரர்.

தேவேந்திரன்: அப்படியா! மிக நன்று. உங்கள் இருவருக்கும் நல்வரவு. உங்களிருவருக்கும் நமஸ்காரம். உங்களைப்பற்றி நான் ஏராளமாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆதலால் உங்களது வருகையைக் குறித்து நான் பெரு மகிழ்வு அடைகிறேன். முனி சிரேஷ்டர்களாகிய நீங்கள் இருவரும் இவ்விண்ணுலகுக்கு விஜயம் செய்ததின் நோக்கம் யாதோ?

விஸ்வாமித்திரர்: தேவராஜா, பூலோக வாழ்க்கையையும், சொர்க்கலோக வாழ்க்கையையும் சீர்தூக்கிப் பார்த்து அவைகளுக்கிடையிலுள்ள தராதரங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

தேவேந்திரன்: இவ்விரண்டையும் சீர்தூக்கிப் பார்ப்பது எதற்காக? சொர்க்கத்தையடைய பூலோகவாசிகள் விரும்புகின்றனர். ஆனால் பூலோக வாசத்தை சொர்க்கலோக வாசிகளாகிய நாங்கள் ஒருபொழுதும் விரும்புவதில்லை. இதினின்றே இவ்விரண்டினுள் எந்த உலக

வாழ்வு மேலானது என்பது சொல்லாமலேயே விளங்குகிறதல்லவா ?

வசிஷ்டர் : தேவேந்திரா, நீ இங்ஙனம் கூறுவதில் கருத்து மிக இருக்கிறது. மண்ணுலகில் வாழ்ந்து வருபவர்களில் பெரும்பான்மையோர் விண்ணுலக வாழ்வை விழைகின்றனர். ஆனால் முனிவர்களும் முமுக்ஷுக்களும் மண்ணுல வாழ்வையே மேலானதென மதிக்கின்றனர். எது சிறந்தது என்றறிந்து கொள்ளுதற்குப் பெரும்பான்மையோர் அபிப்பிராயம் உதவாது. சான்றோரது அபிப்பிராயமே சாலச் சிறந்ததாகும். சான்றோர்களுடைய கருத்தை நாங்கள் கவனத்தில் வைத்துக்கொண்டு பூலோகம் சொர்க்கலோகம் ஆகிய இரண்டையும் சீர் தூக்கிப் பார்க்க விரும்புகிறோம்.

தேவேந்திரன் : அப்படியே செய்யுங்கள். இந்த விண்ணுலகிலுள்ள விழுப்பத்தை நான் விரைவில் சொல்லி விடுகின்றேன். விண்ணவர்களாகிய எங்களுக்குப் பிறப்பும் வளர்ச்சியும் உண்டு. ஆனால் எங்களுக்கு ஜரை, மரணம் என்று சொல்லப்படுகின்ற தேய்வும் மறைதலும் கிடையாது. நாங்கள் அமரர் எனப்படுகின்றோம். அதாவது கல்பாந்திரம் வரையில் மரணம் எங்களை வந்து தொடாது. இத்தகைய சிறப்புக்களெல்லாம் எங்கள் உலகுக்கே உரியவைகளாகின்றன. மண்ணுலகில் இருப்பவர்களுக்கு இந்த மேன்மைகளெல்லாம் கிட்ட மாட்டா.

விஸ்வாமித்திரர் : நீ சொல்லுவது சரி. பசி, தாகம் முதலியன வந்து தாக்கித் தேவர்களைத் துன்புறுத்துவது உண்டா ?

தேவேந்திரன் : பசியும் தாகமும் இவ்வுலகத்தவர்களுக்கு உண்டு. ஆனால் பசி தோன்றத் தோன்றப் புசிப்பதற்கான நல்லுணவும் உடனுக்குடனே வாய்த்து விடும். தாகம் தோன்றும் போதே தாகசாந்திக்குரிய பானமும் எங்களுக்கு எட்டிவிடும். எந்தப் பானம் பண்ண விரும்புகின்றோமோ அது எண்ணிய விதம் எங்களுக்கு எட்டிவிடும். ஆதலால் பசி தாகத்தைக் குறித்து எங்களுக்குக் கவலையொன்றும் இல்லை.

வசிஷ்டர் : அப்படியா ? ஆனால் இது பாராட்டுதற்குரிய பெருநிலையாக எங்களுக்குத் தோன்றவில்லை.

தேவேந்திரன் : ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்கள்? பசி, தாகத்தை வெல்லுதற்குத்தானே விண்ணவரும் மண்ணவரும் முயன்று வருகின்றனர்? அம் முயற்சியில் மண்ணவர்களைவிட அதிகமாக விண்ணவர்களாகிய நாங்கள் வெற்றி கண்டிருக்கிறோம்.

விஸ்வாமித்திரர் : அப்படியானால் தேவராஜா, உனது உலகில் இருப்பவர்கள் நெடிது பசிதாகம் கொண்டிருப்பதில்லையா ?

தேவேந்திரன் : அதுதான் இங்கு கிடையாது.

விஸ்வாமித்திரர் : அதை ஒரு சீரிய நிலையென நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் பசியையும் தாகத்தையும் ஒருவாறு வென்றிருப்பதுபோன்று மண்ணுலகில் வசிப்பவர்களுக்கிடையில் செல்வம் மிகப் படைத்தவர்களும் பசியையும் தாகத்தையும் வென்றிருக்கின்றனர். ஆனால் அதில் அவர்களுக்கு நலன் ஒன்றும் வாய்ப்பதில்லை. பசியை முன்னிட்டோ, தாகத்தை முன்னிட்டோ அவர்கள் வாடியிருப்பதில்லை. அதனால்

அவர்களுக்கு மனோ முயற்சி மிகக் குறைவு; பசியும் தாகமும் வரவேண்டும். அப்பசியையும் தாகத்தையும் இடையிடையே மணிக்கணக்கில் அல்லது தொடர்ந்து இரண்டொரு நாளைக்குச் சகித்திருந்து பழகவேண்டும். அப்படிப் பழகுபவர்களுக்கே சகிப்புத் தன்மை வருகிறது. அப்படிப் பழகுபவர்களுக்கே பொறுமையுண்டாகிறது. அப்படிப் பழகுபவர்களுக்கே மன உறுதி வருகிறது. மன உறுதி அடையப் பெறுதவர்கள் மேலோர்கள் ஆகமாட்டார்கள். எங்கள் பூவுலகில் இக்கோட்பாட்டை நாங்கள் தெளிவுறக் காண்கின்றோம். செல்வம் மிகப் படைத்து சுக ஜீவனம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு அறிவு வளர்ச்சி இல்லை. மன பரிபாகத்தில் முன்னேற்றமும் இல்லை. இருந்த படி உண்டு, உடுத்து இன்புற்றிருப்பது விண்ணவர்கள் செயலும், மண்ணுலகில் இருக்கும் செல்வம் படைத்தவர்களது செயலும் ஆகின்றது. ஆதலால் உனது நாட்டிலுள்ள இந்தச் சிறப்பை மேலானது என நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். இதைத்தவிர வேறு ஏதாவது சிறப்பு விண்ணுலகுக்கு உரியதாக இருந்து வருகிறதா?

தேவேந்திரன் : ஆம்; சுவர்க்க வாசிகளாகிய நாங்கள் மரண பயமின்றி இனிது வாழ்ந்திருக்கின்றோம். கல்ப காலம் நாங்கள் வாழ்ந்திருப்பது எங்களுடைய தனிப் பேறு ஆகும்.

வசிஷ்டர் : இந்தப் பேற்றினை ஒரு பேறு ஆக நாங்கள் மதிப்போமல்லோம். நெடுநாள் தனக்குச் சாவு இல்லையென்று உணர்ந்திருப்பவன் ஞானத் துறையிலோ, அருள் துறையிலோ முயற்சி எதையும் எடுத்துக்கொள்

வதில்லை. மண்ணுலக வாசிகளாகிய எங்களுக்குப் பிறந்தது முதற்கொண்டு எப்பொழுது வேண்டுமானாலும் மரணம் வந்து வாய்க்கலாம். இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பர் என்று நிலவுலகில் உறுதி கூறமுடியாது. வாழ்வானது ஆங்கு நிலையற்றதாய் இருப்பதால் அறநெறியிலும் ஆத்ம ஞானத்திலும் அறிவுடையோர் தீவிரமாக முயலுகின்றனர். அத்தகைய முயற்சி கொண்டிருப்பதற்கிடையில் ஒரே பிறவியில் மண்ணுலக வாசி ஒருவன் மிகக் கீழ் நிலையிலிருந்து மகோன்னத நிலைக்கு மேல்நோக்கிப் போகமுடியும்.

விஸ்வாமித்திரர் : தேவராஜா, இப்பொழுது வசிஷ்டர் மொழிந்ததற்குச் சான்றாக என்னை எடுத்துக் கொள்ளலாம். நான் நிலவுலகில் க்ஷத்திரியனாகப் பிறந்தேன். இதே பிறவியில் பிரம்ம ரிஷி ஆக வேண்டுமென்று விரும்பினேன். அதற்காக அரும்பாடுபட்டேன். கடும் தவங்கள் புரிந்தேன். எத்தனையோ தடவைகளில் தவ நெறி வழுவிக் கீழ்மையில் விழுந்தேன். ஆயினும் முயற்சியைக் கைவிடவில்லை. திரும்பத் திரும்ப முயன்று என்னைப் பக்குவப்படுத்தி பிரம்ம ரிஷி நிலையை எட்டியுள்ளேன். இந்த வசிஷ்டரே நெடு நாளாக என்னை ஒரு பிரம்ம ரிஷியாக அங்கீகரிக்க மறுத்து விட்டார். ஆயினும் இறுதியில் நான் எய்தி உள்ள மனபரிபாகத்தை முன்னிட்டு என்னை ஒரு பிரம்ம ரிஷியாக அங்கீகரித்துக் கொண்டார். உங்கள் சொர்க்கலோகத்தில் இத்தகைய முன்னேற்றத்திற்கு இடமுண்டா?

தேவேந்திரன் : மாமுனிவர்களே, நீங்கள் இருவரும் எனக்கு இப்பொழுது எடுத்து இயம்பியுள்ள நிலவுல

கப் பெருமைகள் ஒருவாறு விளங்குகின்றன. எங்கள் விண்ணுலகில் தேவன் ஒருவன் நெடிது இன்புற்றிருப்பதற்கு வேண்டிய வசதிகளெல்லாம் உண்டு. ஆனால் முன்னேற்றத்திற்கு மட்டும் ஈண்டு இடமில்லை. ஆதலால் எங்கள் உலகம் ஒருவிதத்தில் சிறந்தது என்றால் உங்கள் உலகம் மற்றொரு விதத்தில் சிறந்ததே. இதை நான் ஒத்துக்கொண்டாக வேண்டும். விஸ்வாமித்திர முனிவரே, தாம் பிரம்மரிஷி ஆகிய வரலாறு அனைத்தையும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இப்பொழுது உம்மைப்போன்று பெருவிரதம் பூண்டு நன்னெறியில் முயற்சி பண்ணி வருகிற மானுடன் வேறு யாராவது உண்டா?

வசிஷ்டர்: ஆம். ஹரிச்சந்திரன் என்னும் அரசன் ஒருவன் இந்நாளில் அயோத்தியில் ஆட்சி புரிந்து வருகின்றான். இந்த விஸ்வாமித்திரர் தோன்றிய சூரிய குலத்தில் அந்த ஹரிச்சந்திரனும் தோன்றியுள்ளான். அவன் சத்திய விரதம் பூண்டவன். எக்காரணத்தை முன்னிட்டும் சத்தியத்தினின்று அவன் பிசகுவதில்லை. அத்தகைய அரிய விரதம் பூண்டுள்ளவன் ஒருவன் எங்கள் மண்ணுலகத்திலன்றி, உங்களுடைய விண்ணுலகத்திலோ, அல்லது வேறு எவ்வுலகத்திலோ காணமுடியாது.

தேவேந்திரன்: சத்தியத்தையே பேசுபவர்களை எங்கள் சொர்க்க லோகத்திலும் சர்வ சாதாரணமாகக் காணலாம். நீங்கள் யாரோ ஒரு மனிதனைக் குறித்து சத்திய விரதம் பூண்டவன் என்று சிறப்பித்துச் சொல்லுகிறீர்கள். இங்கு விண்ணுலகில் இருப்பவர்களே பொதுவாக சத்தியமே பேசுபவர்கள். யாரோ

சிலர்தான் சுயநலத்தை முன்னிட்டோ, பொருமையை முன்னிட்டோ, சத்திய விரதத்தினின்று பிசகுகின்றனர்.

வசிஷ்டர்: தேவராஜா, எங்கள் மண்ணுலகில் இருக்கிறவர்களும் பொதுவாக சத்தியமே பேசுபவர்கள்தான். அங்கு பொய் பேசுபவர்கள் இங்கு இருப்பவர்கள் போன்று சுயநலக்காரர்களும் பொருமை பிடித்தவர்களுமே யாவர். பின்பு, நாம் பகர்கிற ஹரிச்சந்திரன் அலாதியான மகிமை வாய்க்கப்பெற்றவன். என்ன தான் இடுக்கண் வருவதாயிருந்தாலும் மரணத்துக்கே ஆளாவதாய் இருந்தாலும் அவன் சத்திய விரதத்தினின்று இம்மியளவும் பிசகான்.

விஸ்வாமித்திரர்: மகரிஷியே, நீங்கள் அப்படித்துணிந்து பேசவேண்டாம். ஹரிச்சந்திரன் மண்ணுலகவாசிதானே! அவன் அரசனுயிருப்பதை முன்னிட்டு பொய் பேசவேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை. ஏனென்ருல் அவன் போன்ற ஓர் அரசனுக்கு வாழ்க்கையில் நெருக்கடி ஒன்றும் உண்டாவதில்லை. மற்று, நெருக்கடி வந்துவிட்டாலோ, அக்கஷ்டத்தினின்று விடுபடுதல் பொருட்டு மனிதன் ஒருவன் பொதி பொதியாகப் பொய் பேசிவிடுவான். நெருக்கடி ஒன்று நேரும் வரையில் ஹரிச்சந்திரன் சத்திய விரதத்தில் நன்கு நிலை நின்றவன்தான். கஷ்டதசையில் அல்லது ஆபத்து வேளையில் அவனுடைய வாய்மையெல்லாம் பறந்தோடி விடும்.

வசிஷ்டர்: விஸ்வாமித்திரரே, நீங்கள் ஹரிச்சந்திரனைச் சாதாரண மக்களோடு ஒப்பிட்டு மதிப்புப்போட்டிருக்

கிறீர்கள். அவனுடைய மனபரிபாகத்தை நான் நன்கு அறிவேன். சத்திய தேவதைக்கு இருப்பிடமாக இலங்குபவன் அம் மன்னன். உண்மையினின்று அவன் ஒருபொழுதும் பிசகான்.

விஸ்வாமித்திரர் : உண்மையினின்று பிசகும்படி நான் அவனைச் செய்து விட்டாலோ?

வசிஷ்டர் : அது உங்களாலும் இயலாது; இந்த தேவராஜனாலும் இயலாது; தேவர்கள் எல்லாரும் ஒன்று கூடினாலும் முடியாது. முழுமுதற்பொருளாகிய மகாதேவனாலேயே அது முடியாது என்றால் மற்றவர்களைப் பற்றி பேச்சு எதற்கு?

விஸ்வாமித்திரர் : வசிஷ்டரே, சத்தியத்தை அளந்து பேசுகிற தாம், சத்தியமல்லாத ஒன்றை எண்ணிப் பார்க்காது இயம்பிவிட்டீர். நீங்கள் பகருகிறபடி ஹரிச்சந்திரன் சத்திய சொரூபி அல்ல என்பதையும், நீங்கள் இப்பொழுது பகர்ந்திருப்பது உண்மையல்ல என்பதையும் நான் நிரூபித்துக் காட்டமுடியும்.

வசிஷ்டர் : வேண்டுமானால் முயன்று பாருங்கள். தோல்வி உங்களுடையதே ஆகும். பிறகு நீங்கள் அதைக் குறித்து வருந்தவேண்டி வரும்.

விஸ்வாமித்திரர் : நான் ஏன் வருந்த வேண்டும்? நான் தோல்வியுற்றால் அது உங்களுடைய ஞானதிருஷ்டிக்கு அத்தாக்ஷி ஆகும். ஹரிச்சந்திரன் ஓர் அலாதியான மகிமைவாய்ந்த மேலோன் என்பதும் வெளியாகும். என் தோல்வியைக் குறித்து நான் வருந்துவதைவிட உங்கள் இருவருடைய மகிமைகளைக் குறித்து நான் மகிழ்வடைவேன். இந்தப் பேச்செல்லாம் ஒருபுற

மிருக்கட்டும். ஹரிச்சந்திரனுடைய தரம் தாங்கள் பகருகிறபடி அவ்வளவு பெரியது அல்ல என்பதை நிரூபிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை நான் உண்டுபண்ணப் போகிறேன். வாருங்கள் பூவுலகுக்குத் திரும்புவோம். தேவராஜனே, எங்களுக்கு விடைகொடுத்து அனுப்பும். உங்களுடைய விண்ணுலகை நாங்கள் வந்து பார்த்த பிறகு ஒவ்வோர் உலகிலும் நலம் கேடு ஆகிய இரண்டும் அனுகூலம், பிரதிகூலம் ஆகிய இரண்டும் கலந்தே இருக்கின்றன என்பது எங்களுக்கும் விளங்குகிறது.

தேவேந்திரன்: நீங்கள் இருவரும் இங்கு வந்து எடுத்தோதிய பல விஷயங்களிலிருந்து நீங்கள் பகருவது உண்மை என்று எனக்கும் விளங்குகிறது. நீங்கள் இருவரும் இந்த விண்ணுலகிற்கு வந்து கிளப்பிய விவகாரத்தின் விளைவாக ஒருவேளை ஹரிச்சந்திரனுக்குப் பிரதிகூலமான சூழ்நிலைகளை யெல்லாம் விஸ்வாமித்திரர் உண்டுபண்ணப் போகிறாரோ என்னவோ எனக்கு விளங்கவில்லை. அப்படி மண்ணுலகில் இனி ஏதாவது நிகழுமாகில் விண்ணுலகில் இருந்து கொண்டே அவை யாவையும் பற்றி அறிந்துகொள்ள நான் முயலுவேன். மகரிஷிகளே, சென்று வாருங்கள். உங்களுடைய வருகையால் எங்கள் உலகும் புனிதம் அடைந்திருக்கிறது என்பதை நான் மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உங்களிருவருக்கும் நமஸ்காரம்.

முனிவர் இருவரும்: தேவராஜா, உனக்கு மங்களம் உண்டாகுக; சென்று வருகிறோம்.

காட்சி 2

இடம் : அரண்மனை

(தான் வேட்டையாடியதின் விளைவைப்பற்றி ஹரிச்சந்திரன் சேனாதிபதியோடும் மந்திரியோடும் உரையாடுகின்றான்.)

ஹரிச்சந்திரன் : நாம் தொடர்ந்து வேட்டையாடியதின் விளைவாக நமது சேனைகளுக்கு இன்னல் ஏதேனும் விளைந்துள்ளதா? சேனாதிபதி, அப்படி ஏதாவது நலனோ அல்லது கேடோ நிகழ்ந்திருக்குமாயின் அதை யெல்லாம் தெளிவுற எனக்கு எடுத்து இயம்புவீராக.

சேனாதிபதி : அரசே, காட்டு விலங்குகளோடு மும்முரமாய்ப் போராடியதின் விளைவாக நமது சேனையில் பலபேர் மடிந்துபோக நேரிட்டது. அப்படி அவர்கள் போராட்டத்தில் மடிவதும் இயல்பே. துருப்புகளுக்கும் சிப்பாய்களுக்கும் சிறிதேனும் அழிவில்லாது எந்தப் போராட்டத்தையும் யாருமே நிகழ்த்தமுடியாது. அக்கொடிய ஜந்துக்களைக் கானகத்தில் கொன்று அழித்ததெல்லாம் நாட்டின்மீது படையெடுத்து வந்த எதிரியோடு போராடுவதற்கு நிகராயிற்று. ஒருவிதத்தில் பகைவரை எதிர்த்துப் போர் புரிவது சேனைக்கு மிகச் சுலபம். ஆனால் வனத்துக்குள் மறைந்திருந்து மக்களுக்குக் கேடு சூழ்கின்ற கரடி, புலி, சிங்கம், யானை முதலிய விலங்குகளைத் தேடிப்பிடித்துத் தாக்கிக் கொல்வது சாமானியமான செயல் அல்ல. அத்தகைய பயங்கரமான செயல்களையும் நமது போர் வீரர்கள் திறம்படச் செய்து முடித்தனர்; வெற்றியும் கண்டனர். துஷ்டமிருகங்களையெல்லாம் இத்தரணியினின்று நம்

சேனைகள் தகர்த்துத் தள்ளிவிட்டது என்றே சொல்லலாம்.

ஹரிச்சந்திரன் : சரி, மேலும் அவைகள் உற்பத்தியாகி வந்து பழையபடி நமக்குத் தீங்கு விளைவிக்கமாட்டா என்று உறுதி கொள்ளுவது எங்ஙனம் ?

சேனாதிபதி : வேந்தே, அவ்விலங்குகளை மட்டுமல்ல, அவைகளுக்கு வாழ்விடமாயிருந்த வனங்களையே துவம்சம் செய்து விட்டோம். இனி வேழங்களோ, வேங்கைகளோ, கரடிகளோ, காட்டுப் பன்றிகளோ, புலிகளோ, சிங்கங்களோ உற்பத்தியாவதற்கு இடமில்லை. எனவே கொடிய மிருகங்களின் தொந்தரை இனி ஒருநாளும் ஏற்படாது என்றே உறுதி கூறலாம்.

ஹரிச்சந்திரன் : அது சரி, அழிந்துபட்டுப்போன வனம் மீண்டும் முளைத்துவராது என்று யார்தான் உறுதி கூறமுடியும் ?

மந்திரி : அரசே, அதைப் பற்றிய கவலை தங்களுக்கு வேண்டாம். காடு ஆயிரம் ஆண்டு, நாடு ஆயிரம் ஆண்டு என்று உலகின் போக்கைப் பற்றிய பழமொழி ஒன்று உண்டு. இதுகாறும் காடாயிருந்தவைகளை யெல்லாம் தோட்டங்களாகவும், கழனிகளாகவும் திருத்தி அமைத்து நம் குடிமக்களிடம் சாகுபடிக்காகவெனக் கொடுத்தாய் விட்டது. தங்கள் பயிர் பச்சைகளுக்கெல்லாம் திரும்பத் திரும்ப துஷ்ட ஜந்துக்களிடத்திருந்தும் பறவைகளிடத்திருந்தும் தீங்கு நேர்ந்ததை எண்ணிக்கலங்கியிருந்த குடிமக்கள் இப்பொழுது பெரிதும் திருப்தியடைந்திருக்கின்றனர். ஏனென்றால் சாகுபடிக்காக ஒரு மடங்கு நிலம் படைத்திருந்தவர்

களுக்கு இப்பொழுது இரண்டு மடங்கு அல்லது மூன்று மடங்கு நிலம் தரப்பட்டிருக்கிறது. இனி அவர்கள் பரந்த போக்கில் பயிர் பச்சைகளை உற்பத்தி பண்ணலாம். கிருஷி இதுவரையிலும் கண்டிராத மேல்நிலையை இனி எட்டிவிடும். தானிய வகைகள் விளைந்து குவியும். காட்டில் வாழ்பவைகளிடமிருந்து இனி உணவுப் பொருள்களுக்கு அழிவில்லை. ஆதலால் மக்கள் வேண்டியவாறு தனதானியங்களை விருத்தி செய்து மகிழ்வுற்று வாழ்வார்கள். ஆதலால் நாம் வேட்டையாடிய தன் விளைவாக நாட்டுக்கு நலன் மிக விளையப் போகிறது.

புரோகிதர் : வேந்தே, ஒரு விண்ணப்பம். விஸ்வாமித்திர முனிவர் தங்களைக் காண விரைந்து வந்து கொண்டிருக்கிறார். அரண்மனையின் வாயிலினுள்ளும் அவர் வந்தாய் விட்டது. இதோ தங்கள் முன்னிலைக்கும் அவர் எழுந்தருளுகின்றார்.

ஹரிச்சந்திரன் : அப்படியா, அவரின் வருகை நம் பாக்கியமாகும். நாம் அம் மாமுனிவரை எதிர் சென்று அழைத்து வருவோம்.

காட்சி 3

இடம் : அரண்மனை

ஹரிச்சந்திரன் : முனி சிரேஷ்டரே, தாங்கள் கிருபை கூர்ந்து இந்த அயோத்தியாபுரிக்கு வருகை தந்தது சூரியகுலத்தரசர்கள் பெற்றுள்ள பெரும் பாக்கியமாகும். எனது முன்னோர்களின் தவப் பயன் என்றும் தங்கள் வருகையைப்பற்றிப் பகரலாம். எங்களுக்கு ஆசிகூறி நாங்கள் அறநெறி வழுவாது ஆட்சிபுரிவதற்கு தபோதனரே, தாங்கள் அனுக்கிரகம் செய்யவேண்டும்.

விஸ்வாமித்திரர் : ஹரிச்சந்திரா, சூரியகுலத்தரசர்கள் கடைப்பிடித்து வந்துள்ள ராஜதர்மத்தை நீ காத்தவன் அல்லன். அதினின்று நீ இப்பொழுது பெரிதும் பிறழ்ந்தவனாயிருக்கின்றாய்.

ஹரிச்சந்திரன் : முனிபுங்கவா, நான் வேண்டுமென்று எக் குற்றத்தையும் செய்தது கிடையாது. ஒரு வேளை அறியாமையினால் நான் ஏதேனும் தவறுதல் செய்திருப்பின் தேவரீர் அதைப் பொறுத்தருளி அடியேனுக்கு நல்வழி காட்டியருளும்படி பிரார்த்திக்கிறேன்.

விஸ்வாமித்திரர் : வனத்தில் வசித்திருந்த விலங்குகளையெல்லாம் நீ வரம்புகடந்து போய் மாய்த்துத்தள்ளியது முறையன்று.

ஹரிச்சந்திரன் : தேவே, அக்கொடிய ஜந்துக்கள் எமது குடிமக்களின் வயல்களையும், தோட்டங்களையும், கழனிகளையும் பாழ்படுத்தின. மக்களுக்கு உணவுப்பொருளே ஏதும் எஞ்சிக் கைக்ககப்படுவது அரிது என்னும் நெருக்கடி நேரலாயிற்று. அதைக்குறித்து மக்களும்

என்னிடம் வந்து முறையிட்டனர். கொடிய பிராணி களிடத்திருந்து வருகிற விபத்தினின்று குடிகளைக் காப்பது கொற்றவன் கடமை. ஆதலால் எனக்குரிய ராஜ தர்மத்தைத்தான் நான் செய்தேன். அப்படி நான் செய்ததைக் குற்றம் எனத் தேவரீர் கருதலாகாது.

விஸ்வாமித்திரர் : பயிர் பச்சைகளைக் காட்டு மிருகங்களிடமிருந்து காப்பாற்ற நீ கடமைப்பட்டிருக்கின்றாய். ஆனால் பயிர் பச்சைகளைக் காத்தல்பொருட்டு அவ்வுயிர்களை முற்றிலும் நிர்மூலம் ஆக்குவதற்கு உனக்கு உரிமையில்லை. அவைகளை துடைத்துத் தள்ளியதுமன்றி அவைகள் வசித்திருந்த வனத்தை நீ ஏன் அழித்து வெறும் நிலமாக்கினாய்?

ஹரிச்சந்திரன் : தவ சிரேஷ்டரே, அப்படி நான் காட்டை அழித்ததில் இரண்டு நலன்கள் அடங்கியிருக்கின்றன. வனம் அழிந்துபட்டுப் போனதால் இனி கொடிய வன ஜந்துக்கள் விருத்தியாகமாட்டா. ஆதலால் பயிர் பச்சைகளுக்குக் கேடில்லை. இரண்டாவதாக வெறும் வனமாகக் கிடந்த இடங்களெல்லாம் இனி சாகுபடிக்குரிய நல்லதோட்டங்களாக மாறியமையப்போகின்றன.

விஸ்வாமித்திரர் : இப்படி நீ எண்ணியதும், எண்ணியாங்கு ஆரண்யங்களை அழித்ததும் பெரும் பிசகு ஆகும். ஆரண்யங்கள் சிவபிரானுடைய ஜடாமுடிக்கு நிகராகின்றன. மலைப்பிரதேசங்களில் காடுகள் ஏராளமாக இருந்தால் ஆங்கு மழைப்பெருக்கும் நிலத்தில் நீர் ஊற்றும் சதா இருந்துகொண்டிருக்கும். வனஸ்பதிகளாகிய வானுற வளர்ந்திருக்கும் மரங்கள் இருந்தால்தான் நிலம் மழை நீரால் அரித்துக்கொண்டு போகப்படமாட்டாது. இருந்த இடத்திலேயே அது நீர் வளத்

தைப் பெருக்கிக்கொண்டிருக்கும். மழை நீரால் மண் அரித்துக்கொண்டு போவதற்கு ஏற்ப நிலவளம் தானுக் குறையும். மரங்களில்லாமையால் மழையும் பெய்யாது பொய்க்கும். சிவபெருமானுடைய ஜடாபாரத்தினின்று கங்கை சதா வந்துகொண்டிருப்பது போன்று மலைச்சாரல்களிலுள்ள வனப்பிரதேசங்களிலிருந்து நதிகள் ஓயாது பாய்ந்துகொண்டிருக்கும். அத்தகைய நதிப்பெருக்கு குன்றிவிடுமிடத்துக் கிருஷிக்கு அது பெரிய குந்தகம் ஆகும். இதையெல்லாம் எண்ணிப் பாராது நாட்டுக்கு ஏதோ நலன் செய்வது போன்று கேட்டை மிக நீ வளர்த்துவிட்டாய். அது இருக்கட்டும். சில நாட்களுக்கு முன்பு கன்னிகைகள் இருவர் உன் சபா மண்டபத்திற்கு வந்து உங்கள் அனைவரையும் மகிழ்விக்கிற முறையில் சப்த சுரங்களுடன் கீதங்கள் பாடினார்கள் அல்லவா ?

ஹரிச்சந்திரன் : ஆம் தேவே, அத்தகைய நிகழ்ச்சி ஒன்று நேர்வதாயிற்று.

விஸ்வாமித்திரர் : உங்கள் அனைவர்க்கும் புத்துயிர் ஊட்டுகிற முறையில் பாடியதற்காக அந்த வனிதைகளுக்கு சம்மானம் வழங்கவும் சபையோர் அறிய நீ தீர்மானித்தாய் அல்லவா ?

ஹரிச்சந்திரன் : ஆம் தபோதனரே, அதுவும் உண்மையே.

விஸ்வாமித்திரர் : நீ கொண்ட சங்கல்பத்தினின்று பிசகியது பொய்பேசியதற்கு நிகராகும்.

ஹரிச்சந்திரன் : தபோதனரே, நான் சத்தியத்தினின்றும், சத்திய விரதத்தினின்றும் எக்காரணத்தை முன்னிட்டும் பிசகுபவன் அல்லன்.

விஸ்வாமித்திரர் : அப்பெண்கள் விரும்பியதை வகுத் தளிக்க வாக்குக் கொடுத்துவிட்டு பின்பு அவ்வாக்கி னின்று பிசகியது பொய் ஆகும்.

ஹரிச்சந்திரன் : முனி சிரேஷ்டரே, நான் அம் மடந்தை யருக்குச் சம்மானங் கொடுக்க இசைந்தது உண்மை. ஆனல் அவர்கள் கேட்டதைக் கொடுக்க மறுத்ததினல் நான் விரதத்தினின்று வழுவியவன் ஆகமாட்டேன்.

விஸ்வாமித்திரர் : அஃதெப்படி ?

ஹரிச்சந்திரன் : இக்ஷ்வாகு குலத்துக்குரிய வெண்குடை யைத் தங்களுக்குக் கொடுத்துதவும்படி அவர்கள் வேண்டினர்கள். அப்படி அவர்கள் வேண்டியது அறி வீனம். அவ்வனிதைகள் எவ்விதத்திலும் இக்ஷ்வாகு அரசர்களோடு சம்பந்தப் பட்டவர்கள் அல்லர். அக் குடையை அவர்கள் உடைத்திருப்பது முறைமை ஆகாது. அதைப் பெறுதற்குத் தகுதியற்றவர்களுக்கு நான் அதை எடுத்து வழங்குவது முறைமை ஆகாது. அதை நான் கொடுத்தாலும் சூரியகுலத்து அரசர் களுக்கே இழுக்கு செய்த குற்றம் என்னை வந்து சாரும். எனவே எங்களுக்குரிய வெண்குடையைக் கொடுக்க மறுத்தது சத்திய விரதத்துக்கு விரோதமாகாது.

விஸ்வாமித்திரர் : சரி; அதற்கீடாக அவர்கள் விரும்பி வெளியிட்ட இரண்டாவது வேண்டுதலை நீ ஏன் நிறை வேற்றி வைக்கவில்லை. "நீங்கள் இருவரும் விரும்பி யதைத் தருகிறேன்," என்று வாக்குக் கொடுத்து விட்டு பிறகு மறுதலித்தது முறையாகாது. நீ பொய் போய்விட்டாய். மெய்ம்மையினின்றும் மாறியவன் ஆய்விட்டாய். நீ ஒரு சத்திய விரதன் என்று பெய

ரளவில் உன்னை விளம்பரம் செய்துகொள்கின்றாய். உண்மையில் நீ பொய்யன்; குணக்கேடன்.

ஹரிச்சந்திரன் : முனிபுங்கவா, என்னை மன்னித்தருளும். நான் பொய்யனும் அல்லன்; குணக்கேடனும் அல்லன். சத்திய விரதத்தினின்று சிறிதளவாவது பிசகியவனும் அல்லன், அந்த மடந்தையர் இருவரும் என்னை மணந்துகொள்ள விரும்பினர். அப்படி முறைதவறிக் காமம் கொள்ளுகிறவர்களுக்கெல்லாம் காமத்தைப் பூர்த்தி பண்ணிவைப்பதற்கிணங்குவது அறச் செயல் ஆகாது. அது கொடிய மறச்செயல் ஆகும். காம எண்ணத்துடன் தன்னை அணுகிய சூர்ப்பநகையை எங்கள் ரகுகுல திலகமாகிய ராமச்சந்திரன் எப்படி நடத்தினன் என்பதைத் தங்களுக்கு நினைவூட்டுகிறேன். அறநெறியின் மர்மத்தை எல்லாரும் எளிதில் அறிந்துகொள்ள முடியாது. வேண்டுகிறவர்களுக்கு வேண்டியதெல்லாம் கொடுப்பது அறநெறியாகாது. எந்தப் பாத்திரத்திற்கு எதைக் கொடுப்பது என்று அறிந்திருப்பது அறிவுடையோன் கடமையாகும். வேண்டுபவர் வேண்டுவதை யெல்லாம் தயாநிதியாகிய சர்வேசுவரனே வகுத்தெடுத்து வழங்கிவிடுவதில்லை. யாருக்கு எது நலன் தருமோ அதையே அவர்க்கெடுத்து வழங்குவது முறை. ஆக, அவ்வனிதைகளை நான் விரட்டி ஓட்டியது முற்றிலும் சரி. தங்களைப்போன்றவர்களுக்கு எண்ணிப் பார்க்காது நான் வாக்குக் கொடுத்துவிடலாம். நீங்கள் என்னிடமிருக்கும் எதைக் கேட்டாலும் தயங்காது அதையெல்லாம் தங்களிடம் ஒப்படைக்கிறேன். அப்படிச் செய்வதில் எனக்குக் கேடு ஒன்றும் வந்துவிடாது. நான் கொடுத்துள்ள பொருள்

களுக்கு நஷ்டம் வந்துவிடாது, தாங்களும் அதன் மூலம் என்னிடமிருந்து ஏற்றவைகளை முன்னிட்டுக் கெட்டுப் போய்விட மாட்டீர்கள். யாண்டும் நலனே விளையும். சத்தியத்திலிருந்து பிசகாதவன் என்பதை இப்பொழுது தங்களிடம் நிரூபிக்கிறேன். நீங்கள் என்னிடமிருப்பது எதைக் கேட்டாலும் நான் தந்து விடுகிறேன்.

விஸ்வாமித்திரர்: ஹரிச்சந்திரா, நீ நாடாளுபவன். ஆனல் நீ ஓர் அறிவாளனுகத் தென்படுகிருயில்லை. வரம்பு கடந்து பேசிவிட்டாய்; வரம்பு கடந்து வாக்குத்தத்தமும் செய்துவிட்டாய். நீ எவ்வளவு தூரம் மெய்யன் என்பதை இப்பொழுது நான் பார்த்து விடுகிறேன். பொதுவாக மக்களிடத்திருக்கும் குறைபாடுகளுக்கு நீ விலக்கானவன் அல்லன். சத்தியவிரதத்திற்கும் ஓர் அளவுண்டு. அந்த அளவைக் கடந்து போக மானுடர் யாருக்குமே இயலாது. உனக்கும் அது இயலாத காரியம். என்பதுதான் என் கருத்து. நெருக்கடி எவ்வளவுதான் நேர்ந்திடினும் அதையெல்லாம் பொருள்படுத்தாது நீ சத்திய விரதத்தைக் கடைப்பிடிக்க முடியுமா?

ஹரிச்சந்திரன்: முனி சிரேஷ்டரே, சத்திய விரதத்தினின்று சிறிதேனும்பிறழாதிருக்கவேண்டும் என்பதுநான் எடுத்துக் கொண்டுள்ள விரதம். இது விஷயத்தில் தெய்வானுக்கிரகத்தையும் நான் நாடி நிற்கிறேன். உலகில் நான் எதை இழந்துவிட்டாலும் சத்திய விரதத்தினின்று பிறழ்வதில்லை எனத் தீர்மானித்திருக்கிறேன்.

விஸ்வாமித்திரர்: உன்னிடமிருக்கும் எதை நான் கேட்டாலும் அதை எனக்குக் கொடுப்பதாக நீ இப்பொழுது கூறியுள்ளாய் அல்லவா?

ஹரிச்சந்திரன் : ஆம் அண்ணலே, அப்படித்தான் நான் மனமுவந்து கூறியிருக்கிறேன்.

விஸ்வாமித்திரர் : அப்படியானல் உன்னுடைய நாடு, நகர், மந்திரிபிரதானியர், சேனை, செல்வம் ஆகிய எல்லாம் இப்பொழுதே நீ எனக்குத் தானமாகக் கொடுத்துவிடு.

ஹரிச்சந்திரன் : முனிதிலகா, இதில் எனக்குச் சிரமம் யாதுளது? தங்கள் போன்ற பெரியவரிடம் இதை யெல்லாம் ஒப்படைப்பது முற்றிலும் பொருத்தம். உங்கள் கண்காணிப்பில் சூரியகுல அரசாட்சிக்கோ நாடு நகரத்துக்கோ எந்தவித இழுக்கும் வந்துவிடாது. இதோ, மனமுவந்து இப்பொழுதே தாரை வார்த்து என் ஆட்சியிலிருக்கும் தேசம் முழுதையும் அதன் அங்கங்களையும் உங்களுக்குத் தானமாகக் கொடுக்கின்றேன். சந்திர சூரியன் அறிய, பரம்பொருள் அறிய, பிரபஞ்சம் முழுதும் அறிய நான் இப்பொழுது ஆண்டு வருகிற அயோத்தியா ராஜ்யம் முழுதையும் விஸ்வாமித்திர மகாமுனிவருக்குத் தானமாக ஒப்படைக்கிறேன். இது சத்தியம்! இது சத்தியம்!! இது சத்தியம்!!!

விஸ்வாமித்திரர் : மிக நன்று. உன் செயலைப் பெரிதும் பாராட்டுகிறேன். ஹரிச்சந்திரா, நீ இப்பொழுது யாருடைய ராஜ்யத்தில் நின்றுகொண்டிருக்கிறாய் என்பது தெரியுமா?

ஹரிச்சந்திரன் : ஆம் தபோதனரே, அவ்வுண்மையை நான் நன்கு அறிகிறேன். தங்களுடைய ராஜ்யத்தில் நான் இப்பொழுது நின்றுகொண்டிருக்கிறேன்.

விஸ்வாமித்திரர் : ஹரிச்சந்திரா, இனி உனக்கு என் ராஜ்யத்தில் கணப்பொழுதும் தங்கியிருக்க அனுமதி இல்லை.

நீயும் உன் மனைவி சந்திரமதியும், புதல்வன் தேவதாஸ னும் இப்பொழுது எனது ராஜ்யத்தினின்று வெளியே கிளம்புங்கள். அன்றொரு நாள் தங்குதடையின்றித் தச ரதராமன் இவ் அயோத்தியினின்று வெளியே கிளம்பி யது போன்று இன்று நீயும் புறப்பட்டுச் செல்வாயாக.

ஹரிச்சந்திரன்: தபோதனரே, இதில் சிரமம் யாது உள் ளது? இதோ இப்பொழுதே நாங்கள் புறப்பட்டுச் செல்கிறோம்.

(மூவரும் காலில் விழுந்து நமஸ்கரித்துவிட்டுப் போகி றார்கள். முனிவர் முன்னிலையிலிருந்து மறைகின்றபொழுது)

விஸ்வாமித்திரர்: ஹே! ஹரிச்சந்திரா, இங்கு கொஞ்சம் வா. இன்னும் ஒரு காரியம் பாக்கியிருக்கிறது. அன்று ரகுராமன் தவவேடம் பூண்டு கானகம் ஏகினன். நீயோ உனது ராஜகோலத்துடனேயே புறப்பட்டுப் போகின் றாய். அது பொருந்தாது. இனி உனக்கு ராஜகோலம் எதற்காக? உன் கிரீடத்தையும் நீங்கள் மூவரும் அணிந்திருக்கும் ஆபரணங்களையும் ராஜகோல ஆடை களையும் கழற்றி வைத்துவிட்டுச் செல்லுங்கள்.

ஹரிச்சந்திரன்: ஆம் அண்ணலே, தாங்கள் பகர்வது முற் றிலும் மெய். இனி கொற்றவன் கோலம் எனக்கு எதற்காக? அரசனுக்குரிய சின்னங்களையும் தங்க ளிடத்தே மகிழ்வோடு ஒப்படைத்து விடுகிறேன். விடைதாருங்கள்.

(வீழ்ந்து நமஸ்கரித்துவிட்டுப் போகிறார்கள்)

விஸ்வாமித்திரர்: சென்று வாருங்கள்.

(மூவரும் மறையும் வேளையில்)

விஸ்வாமித்திரர்: ஹே! ஹரிச்சந்திரா, இங்கு சற்று வா. எனக்கு உன்னோடு மற்றொரு வழக்கு இருக்கிறது.

ஹரிச்சந்திரன்: தங்கள் ஆணைக்கு உட்பட்டு நடக்க ஆயத்தமாயிருக்கிறேன்.

விஸ்வாமித்திரர்: கொஞ்ச காலத்துக்கு முன்பு உன்னிடம், நான் செய்யப்போகிற யாகத்துக்குச் செல்வம் வேண்டு மென்று வேண்டினேன். நான் வேண்டிய செல்வத்தை எடுத்து வழங்குவதாகவும் நீ வாக்குக் கொடுத்திருக் கிறாய். அது உன் நினைவில் இருக்கிறதா?

ஹரிச்சந்திரன்: ஆம், அருளாளரே. அது முற்றிலும் என் நினைவில் இருக்கிறது.

விஸ்வாமித்திரர்: நீ இப்பொழுது என்னிடம் கொடுத் துள்ள இந்த அரசாங்கத்தின் செல்வத்தை எடுத்து அந்த யாகத்திற்குப் பயன்படுத்துவது ஒவ்வாது. அரசாங்கத்தின் செல்வமெல்லாம் இனிப் பொதுமக் களுக்கே உரியதாகப் போகிறது. நீ எனக்கு வாக்குக் கொடுத்தபடி வேறு எங்கேயாவது செல்வம் தேடித் தரப்போகின்றாயா ? அல்லது அது இனி உனக்கு சாத் தியமல்ல என்று கைவிரித்து விடப்போகின்றாயா ?

ஹரிச்சந்திரன்: மாமுனிவரே, கொடுத்த உறுதிமொழியி னின்று நான் பிசகுவது சரியல்ல. 'இயல்வது கரவேல்' என்பது கோட்பாடு. ஏதேனும் ஒருவிதத்தில் நிதி திரட்டி நான் சொல்லிய சொற்படி தங்களுக்கு வழங்க இயலும். அது எனக்குச் சாத்தியமாயிருக்கிறபொழுது கொடுக்க இயலாது என்று சொன்னால் நான் பொய்யன் ஆவேன். எப்படியும் நீங்கள் கேட்டுள்ள திரவியத்தைத் தங்களுக்குத் தேடி எடுத்து ஒப்படைத்துவிடுகிறேன்.

விஸ்வாமித்திரர் : மிக நன்று. ஆனால் இப்பொழுது என் வசமிருக்கும் அரசாங்கத்தின் எல்லைக்குள் நீ நிதி திரட்டலாகாது. என் அரசாங்கத்தில் பிரஜைகளா யிருப்பவர்கள் வலியவந்து உனக்கு நன்கொடையாக நிதிகொடுத்தாலும் நீ அதை ஏற்றுக்கொள்ளலாகாது. அப்படி ஏற்பது இந்த அரசாங்கத்துக்குரிய செல்வத்தை ஏற்பதாகும். அயோத்தி அரசாங்கத்தின் எல்லைக்கப் பால் சென்று உனக்கு இயலுகிற முறையில் நீ செல்வம் திரட்டலாம்.

ஹரிச்சந்திரன் : அருளாளரே, தாங்கள் இப்பொழுது பகர்வது முற்றிலும் பொருத்தமானது. நான் சத்தியம் கூறுகிறேன். இனி, இந்த அரசாங்கத்தில் யாரிடமிருந்தும் ஒரு காசும் நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். வேற்றரசன் நாட்டிலிருந்து தாங்கள் வேண்டுகிற நிதியை எப்படியாவது சேகரித்துத் தர முயலுகிறேன்.

விஸ்வாமித்திரர் : சரி, இன்று முதல் ஒரு மாதம் கெடு தருகிறேன். எந்த இடத்தில் எப்பொழுது நான் கேட்டுள்ள திரவியத்தை நீ எனக்கு எடுத்துச் செலுத்துவாய்?

ஹரிச்சந்திரன்: முனி புங்கவரே, ஒரு மாதம் கெடு போதாது. நான் காசிக்குச் செல்ல எண்ணியிருக்கிறேன். அங்கு போய்ச் சேருதற்கே ஒரு மாதத்திற்கு மேல் பிடிக்கும். கிருபை கூர்ந்து கெடுவை இன்னும் கொஞ்சம் தளர்த்திக் கூறுங்கள்.

விஸ்வாமித்திரர் : அப்படியா, நல்லது. உன் பொருட்டு மூன்று மாதம் கெடு தருகிறேன். அப்பொழுது நானே நேரில் காசிக்கு வந்து சேருகிறேன். நீ வாக்குக்

கொடுத்துள்ள செல்வத்தைக் காசி வாசிகள் அறிய நீ அங்கே செலுத்தி விடுவாயாக.

ஹரிச்சந்திரன் : ரிஷி சிரேஷ்டரே, தங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றேன். தங்கள் உத்தரவின் படி மூன்று மாதங்களில் காசியில் நான் கொடுப்பதாகக் கூறியுள்ள செல்வத்தைச் செலுத்திவிடுகிறேன். விடை தாரும். போய் வருகிறேன்.

(நமஸ்கரித்துவிட்டுப் புறப்படுகிறார்கள்)

விஸ்வாமித்திரர் : மிக நன்று, போய்வாருங்கள்.

(அவர்கள் மறையும்போது விஸ்வாமித்திரர் மேலும் கூப்பிடுகிறார்)

விஸ்வாமித்திரர் : ஹே ! ஹரிச்சந்திரா, இங்கு சற்று வா. மற்றொரு முக்கியமான விஷயம்.

ஹரிச்சந்திரன் : (திரும்பி வந்து) தங்கள் உத்தரவுக்கு உட்பட்டு நடக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

விஸ்வாமித்திரர்: ஹரிச்சந்திரா, கொஞ்சம் யோசித்துப் பார். நான் இப்பொழுது பகர்வது உசிதம் என்று உனக்குத் தோன்றினால் நீ அதன்படி நடந்துகொள்வாயாக. மீண்டும் ஒரு முறை நான் உனக்கு ஆணையிடுகிறேன். உன் முன் வந்து அன்றொருநாள் நடனமாடி உன்னை மகிழ்வித்த வனிதைகள் இருவரையும் நீ மணந்துகொள். இதற்கு நீ இசைவாயாகில் உன்னுடைய ராஜ்யத்தை இப்பொழுதே உனக்குத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். யாகத்திற்கு நிதி திரட்டிக் கொடுக்கும் நிபந்தனையினின்றும் உன்னை நான் விடுவித்து விடுகிறேன். இதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?

ஹரிச்சந்திரன் : முனிபுங்கவா, நான் இப்பொழுது இக லோக செல்வத்தையெல்லாம் இழந்தவனுக இருக்கிறேன். ஆனல் என் விவேகத்தை நான் இழந்துவிடவில்லே. எந்த விஷயத்தில் நான் உங்களுக்கு அடிபணிய வேண்டும், எந்த விஷயத்தில் அடிபணியலாகாது என்னும் பாகுபாட்டை நன்கு அறிந்துள்ளேன். அந்த மடந்தையர் இருவரையும் மணந்துகொள்ள நான் ஒருபொழுதும் ஒருப்படேன். அதைக் குறித்து நீங்கள் எவ்வளவுதான் ஆக்ஞாபித்தாலும் அந்தக் கட்டளேக்கு நான் கட்டுப்படமாட்டேன். கட்டுப்படுவது எனக்கு அறம் அல்ல. உங்களுக்குத் தானமாகக் கொடுத்துவிட்ட ராஜ்யத்தை இம்முறையில் ஏற்பது இருமடங்கு பாவமாகும். ஆதலால் நான் மீண்டும் ராஜ்யத்தை உங்களிடமிருந்து பெறுவதைப் பற்றிய பேச்சைக் கிளப்ப வேண்டாம். நீங்கள் கொண்டுள்ள இந்த ஓர் எண்ணம் ஒருபொழுதும் நிறைவேருது. விடை தாருங்கள், சென்று வருகிறேன்.

விஸ்வாமித்திரர் : உன்னே மெச்சுகிறேன். சரி, போய்வா.

(ஹரிச்சந்திரன் போயான பிறகு)

இவனுடைய தீர்மானம் பாராட்டத்தக்கது. தேவேந்திரனும் வசிஷ்டரும் மொழிந்ததில் பொருள் மிக இருக்கிறது. ஆயினும் இந்த ஹரிச்சந்திரனுடைய சத்திய விரதத்தின் வலிவை மேலும் அலசி ஆராய்ந்து பார்ப்போம்.

காட்சி 4

இடம் : அயோத்தியில் ஒரு வீதி

(ஹரிச்சந்திரனும் மந்திரி சத்தியகீர்த்தியும்)

ஹரிச்சந்திரன்: சேனாதிபதி, மந்திரிமார்களே, நீங்கள் என்னைப் பின் தொடர்ந்து மேலும் வரவேண்டாம். வழியனுப்புதற்குக் கொஞ்சதூரம் நீங்கள் என்னைப்பின் பற்றி வந்தது முற்றிலும் பொருத்தமானதே. இனி, திரும்பிச் செல்லுங்கள். அயோத்தியாபுரியில் ஆட்சி முறையில் உள்ள அங்கங்களை யெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள். இப்பொழுதுதான் ஆட்சிக்குரிய பொறுப்பை எடுத்துள்ள அம்முனிபுங்கவருக்கு அதன் விரிவான விவரங்களெல்லாம் தெரியாதிருக்கலாம். ஆதலால் அவர்களுக்கு எல்லா விதத்திலும் பக்க உதவியாயிருந்து சமஸ்தான காரியங்களெல்லாம் முறையாக நடந்தேறும்படி பார்த்துக்கொள்ளுவது உங்கள் கடமையாகும். என் பிரிவை முன்னிட்டு பொதுநல சேவையில் நீங்கள் பராமுகமாக இருந்துவிடலாகாது. முழுமனதோடு ராஜ்யத்தை நான் தபோதனரிடம் ஒப்படைத்து விட்டேன். ஆதலால் நீங்களும் முழுமனதோடு அவருக்குப் பக்க உதவியாயிருப்பது உங்களுடைய கடமையாகும். அதைச் சரிவர நிறைவேற்றி வைப்பீர்களாக. சென்று வாருங்கள்.

குடிமகன்: 2. வேந்தே, தங்கள் ஆணையைத் திரிகரண சுத்தியுடன் நிறைவேற்றிவைக்கிறோம். தங்கள் ஆணைப்படி நாங்கள் இத்துடன் பின்வாங்குகிறோம். தங்களுக்குக் காசி விசுவநாதர் அருளால் மங்களம் அனைத்தும் உண்டாகுக.

(போகிறார்கள்)

ஹரிச்சந்திரன் : பிராணசகீ. நமக்குத்தற்செயலாய் நிகழ்ந்துள்ள இந்த நிலையைக் குறித்து நீ என்ன நினைக்கின்றாய் ?

சந்திரமதி : பிராணநாதா, மக்கள் எல்லாருடைய வாழ்க்கையிலும் உடைமையும் வறுமையும் ஒரு வழி நிற்பதில்லை எனக் கேள்விப்பட்டிருக்கிறோம். கேள்வியளவில் இருந்த அக்கோட்பாடு இப்பொழுது செயல் வடிவெடுத்து நம்மை வந்து சார்ந்திருக்கிறது. நாம் உண்மையாகவே மன உறுதி வாய்க்கப்பெற்றவர்களா, அல்லது வெறும் வாய்ப்பேச்சில் நெறி பிறழாதவர்களாக இருக்கிறோம் என்று பாசாங்கு செய்து வந்தவர்களா என்பது இப்போது பரிசோதனைக்கு வந்திருக்கிறது. நமக்கு நேர்ந்துள்ள இந்த நெருக்கடியை நான் மன அமைதியுடன் ஏற்றுக்கொள்ளுகிறேன். வறியோர்க்கு அழகு வறுமையில் செம்மை என்பது கோட்பாடு. நமக்கு வாய்த்துள்ள வறுமையிலும் செம்மையினின்று நாம் சிறிதும் பிசகாதிருக்கும்படி சர்வேசுவரன் அருள் புரிவாராக.

ஹரிச்சந்திரன் : (பின் தொடர்ந்து வந்த சத்தியகீர்த்தியைப் பார்த்து) சத்தியகீர்த்தி! நான் உங்கள் எல்லோருக்கும் விடைகொடுத்து அனுப்பியாய் விட்டதே ! மீண்டும் எங்களைப் பின்தொடர்ந்து வருவதற்குக் காரணம் என்ன ? அரசாங்க விஷயத்தில் இன்னும் ஏதாவது ஆலோசனை கேட்கவேண்டும் என்னும் எண்ணத்துடன் முதல் மந்திரியாகிய நீர் பின்தொடர்ந்து வருகின்றீரா ?

சத்தியகீர்த்தி : அஃதொன்றுமில்லை வேந்தே. ஆட்சி முறைக்கு வேண்டிய அங்கத்தினர்கள் ஏராளமாக

அமைந்திருக்கின்றனர். அவர்கள் எல்லாரும் விஸ்வாமித்திர முனிவருக்கு முழுமனதோடு பணிவிடையாற்றுவார்கள். அரசாங்கக் காரியங்களையும் ஆர்வத்துடனும் ஒழுங்காகவும் நிறைவேற்றி வருவார்கள். அதைக் குறித்து ஐயமொன்றுமில்லை.

ஹரிச்சந்திரன்: அப்படியானால் நீரும் திரும்பிப்போகலாமே. எங்களுடன் பின்தொடர்ந்து வருவது உமக்குப் பொருந்தாது.

சத்தியகீர்த்தி: அறநெறி பிறழாத அரசே, என்னைத் தாங்கள் வேற்றாளாக விலக்கி வைப்பது ஒவ்வாது. அன்னை சந்திரமதியும் மைந்தன் தேவதாஸனும் தங்களுக்குச் சொந்தமாயிருப்பது போன்றே என்னையும் நீங்கள் உரிமையாக்கிக் கொள்ளவேண்டும். கஷ்டதசையில்தான் நான் உங்களிடத்து இன்னும் அதிகமாக ஒட்டியிருந்து பணிவிடை செய்யவேண்டும். உங்களுக்கு வாய்த்துள்ள கஷ்ட தசையின் பெரும் பகுதியை நான் என்னுடையதாக முழுமனதோடு ஏற்றுக் கொள்ளவேண்டும். என்னை நீங்கள் புறக்கணித்து விடலாகாது. இதுவே நான் செய்கிற விண்ணப்பம். இதை நீங்கள் அங்கீகரித்தருளுங்கள்.

ஹரிச்சந்திரன்: சத்தியகீர்த்தி! நீ கூறுகிற கூற்றில் பொருள் மிக இருக்கிறது. ஆயினும் உமது விருப்பத்திற்கு நாம் இடம் கொடுப்பது ஒவ்வாது. நம் சூரிய குலத்தில் அவதரித்த ஸ்ரீ ராமபிரானுக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைக்கு நிகரான சோதனை வேறு யாருக்குமே இதுவரையில் நிகழ்ந்ததில்லை. இராமபிரான் காட்டுக்குப் போனபொழுது அவருக்குத் துணை

புரியப் பின்தொடர்ந்து போக அயோத்தியில் பல பேர் ஆவலுடன் காத்திருந்தனர். ஆயினும் இராம பிரான் அவர்களுடைய விண்ணப்பத்திற்கு இணங்க வில்லை. அவர்கள் எல்லோரையும் அயோத்தியிலேயே இருக்கும்படி பணித்துவிட்டுப் புறப்பட்டுப்போனார். அவர் காட்டியிருக்கிற செந்நெறியினின்று நாம் சிறிதேனும் பிசகலாகாது. கஷ்ட தசையில் கஷ்டம் முழுதையும் என்னுடையதாகவும், சந்திரமதியினுடையதாகவும், பாலன் தேவதாஸனுடையதாகவும் நான் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த நெருக்கடியில் மற்றொருவருடைய உதவியை நான் நாடுவேனாகில் அதற்கேற்றவாறு அறநெறியினின்று நான் பிசகியவனாவேன். என்னைச் சத்திய விரதன் என்று நிரூபித்துக் காட்டுதற் பொருட்டுச் சத்தியகீர்த்தியாகிய நீர் இப்பொழுதே அயோத்திக்குத் திரும்பிவிடுவீராக.

(சத்தியகீர்த்தி அழுதுகொண்டு போகிறான்.)

காட்சி 5

இடம்: அயோத்தி

[விஸ்வாமித்திரர் குடிமக்களோடு]

விஸ்வாமித்திரர்: மந்திரிமார்களே, பிரதானிகளே, சேனுபதியே, குடிமக்களே, நான் இந்த ராஜ்யத்தை ஹரிச்சந்திரன் வசமிருந்து பலவந்தமாகப் பிடுங்கியெடுத்தது மண்ணுசையை முன்னிட்டு அல்ல. ஹரிச்சந்திரன் உண்மையாகவே ஒரு தியாக மூர்த்தியா, சத்திய விரதத்தினின்று சிறிதளவாவது பிசகாதிருக்கின்றவனு என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கே கொடூரமாகத் தென்படும் இச்செயலில் நான் துணிந்து இறங்கியிருக்கிறேன். ஆனுல் ஒரு சக்கரவர்த்திபோன்று நான் செங்கோல் செலுத்தப்போவதில்லை. இதுகாறும் முடியரசு நாடாயிருந்த அயோத்தியை இனிக் கொஞ்ச காலத்துக்குக் குடியரசு நாடாகமாற்றியமைக்க எண்ணம் கொண்டுள்ளோம். குடியரசின் அடிப்படைக் கோட்பாடு, நாட்டு மகன் ஒவ்வொருவனும் ஆட்சியின் பொறுப்பையுணர்ந்து அவனவன் கடமையைச் சரியாகச் செய்துவரவேண்டும். அத்தகைய ஆட்சி முறையிலே நீங்கள் இப்பொழுது ஈடுபடுவீர்களாக.

குடிமகன்-1: தபோதனரே, குடியரசு நடைமுறையில் மக்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அப்பிரதிநிதிகள் ராஜ்யசபையை நிர்வகித்து அதன் வாயிலாக ஆட்சி செலுத்துவதென நாங்கள் கேள்விப்பட்டிருக்கின்ரேம். ஆதலால் அதற்கு இப்பொழுது மக்களின் பிரதிநிதிகளை நாங்கள் தேர்ந்தெடுக்கவேண்டுமல்லவா?

குடிமகன் – 2 : முனிபுங்கவா, மற்றொரு முறையைப் பற்றியும் நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அதாவது குடியரசைச் சரியாகக் கொண்டுசெலுத்துதற்குக் குறைந்தது இரண்டு அரசியல் கட்சிகள் இருக்கவேண்டும். ஒவ்வொரு கட்சிக்கும் தனி நிர்வாகத் திட்டம் இருக்கவேண்டும். அந்நிர்வாகத் திட்டத்தைப் பொதுமக்களுக்கிடையில் எடுத்துப் புகட்டவேண்டும். பிறகு பொதுமக்கள் எந்தக்கட்சியின் பிரதிநிதிக்கு வாக்குக் கொடுப்பது என்பதைத் தாங்களே எண்ணிப் பார்த்துத் தீர்மானம் செய்வார்கள். இரண்டு கட்சிகளுள் எந்தக் கட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் எண்ணிக்கையில் அதிகம் பேர் ஆகின்றார்களோ அக்கட்சி ஆட்சிபுரியும். அங்கத்தினர்களின் எண்ணிக்கையில் அடுத்தபடியிலிருக்கும் கட்சி அல்லது கட்சிகள், ஆளுகின்ற கட்சியின் செயல்களைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கும். அப்பொழுதுதான் நாடாளுதல் என்னும் பெருஞ் செயல் நன்கு நிகழும். ஆதலால் எங்களுக்கிடையில் நாங்கள் இப்பொழுது இரண்டு அல்லது மூன்று அரசியல் கட்சிகளை உடனடியாக உருவாக்க வேண்டுமல்லவா ?

விஸ்வாமித்திரர் : பொதுமக்களே, மந்திரி பிரதானிகளே, குடியரசு நடைமுறையில் இப்பொழுது எடுத்து இயம்பப்பட்டுள்ள கோட்பாடுகள் பாராட்டத்தக்கவைகளே ஆயினும் அதில் குறைபாடு ஒன்று உறைந்துள்ளது. அது வெளிக்குத் தோன்றாது. அடிப்படையில் இருந்துகொண்டு அல்லலை உண்டுபண்ணும். உடலுக்குள்ளேயே நோய் இருந்துகொண்டு உடலை உடற்றுவது போன்று கட்சிப் பிரதிகட்சி, போட்டியையும் பொறா

மையையும் வளர்த்துவரும். அதினின்று புதிய கேடு கள் பல தோன்றவும் செய்யும். நாகரீகம் வாய்ந்த நல்ல நாடுகளில் வாழ்க்கையானது போட்டியை அடிப் படையாகக் கொண்டிருப்பதில்லை. பரஸ்பர உதவியை அடிப்படையாகக் கொண்டிருப்பதே நல்ல வாழ்க்கை முறையாகும். மக்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க லாம். தேர்ந்தெடுக்கிறவர்கள் வயதில் மிக முதிர்ந்தவர் களாய் இருக்கவேண்டும். ஐம்பது வயதுக்குக் கீழிருக்கிறவர்களுக்கு நல்லார் பொல்லார்களுக்கிடை யில் பாகுபாடு தெரியாது. ஆனல் வயது முதிர்ந் தவர்களோ அநுபவம் மிக வாய்க்கப்பெற்றவர் கள். பொதுமக்களுள் யார் யார் எத்தகைய பாங் குடையவர் என்பதை நேரில் பார்த்து அறிந்தவர் களாய் இருப்பார்கள். அநுபவம் வாய்க்கப்பெற்ற முதியோர் தகுதி வாய்ந்த நல்லோர்களையே தங்க ளுடைய பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுப்பார்கள். அப் படித் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுள் கட்சிப் பிரதி கட்சி இருக்கலாகாது. நாட்டுக்கு நலன் தருவது எது என்னும் லட்சியத்தையே அவர்கள் அளவையாக வைத்துக்கொள்ள வேண்டும். அத்தகைய நல்லார்கள் கூடிய சபையில் பெரும்பான்மையோர் அபிப்பிராயம் நலனுக்கும் உண்மைக்கும் ஒத்ததாக இருக்கும். அத் தகைய அபிப்பிராயத்தை அனுசரித்தே ஆட்சிமுறை யைச் செலுத்த வேண்டும். அது ஒழுங்குப்பாடான ஆட்சியாக இருக்கும். அத்தகைய சீரிய குடியரசை நீங்கள் கையாண்டு வருவீர்களாக. சாட்சியாக இருந்துகொண்டு நாமும் உங்களுடைய திறமையையும் பொறுப்பையும் கண்காணித்து வருவோம். இதுவே

இன்றுமுதல் அயோத்தியாபுரியிலிருக்கும் புதிய குடியரசாகும்.

குடிமகன் – 1: தபோதனரே, தாங்கள் ஆக்ஞாபித்துள்ளபடியே நாங்கள் எல்லாரும் எங்களுடைய பொறுப்பை உணர்ந்து குடியரசை இனிது கொண்டு செலுத்த முழுமனதுடன் முயலுகிறோம்.

——

காட்சி 6

இடம்: காசியில் விசுவநாதர் ஆலயம்

(காசியில் ஹரிச்சந்திரனும் சந்திரமதியும் தேவதாஸனும் விசுவநாத தரிசனம் செய்கின்றனர்.)

ஹரிச்சந்திரன்: சந்திரமதீ! தேவதாஸா! புண்ணிய க்ஷேத்திரமாகிய காசிக்கு இதோ வந்துவிட்டோம். விசுவநாதருடைய கோயில் கோபுரம் தெரிகிறது பாருங்கள். கோபுர தரிசனம் கோடி பாபநாசம். விரைவில் ஆலயத்தினுள் சென்று அண்ணலை வழுத்துவோம்.

சந்திரமதி: கஷ்டத்துக்குமேல் கஷ்டம் வரினும் கடவுள் பக்தி மட்டும் நம் உள்ளத்தில் நிலைத்திருக்குமாகில் அக் கஷ்டங்கள் நம்மை ஒன்றும் செய்யமாட்டா. நம்மிடத்தில் பக்தி எவ்வளவு வலிவு பெற்றிருக்கிறது என்பதைக் கஷ்டதசையே காட்டிவிடும்.

தேவதாஸன்: இதென்ன அம்மா, இந்த ஊரில் வீதிகளெல்லாம் ஒடுக்கமாக இருக்கின்றனவே; நம் ஊரில் போன்று இங்கு இல்லையே!

ஹரிச்சந்திரன்: மகனே, இனி நமக்கு நம்மூர் என்றும் வேற்றூர் என்றும் பாகுபாடு இல்லை. இந்த ஊர்தான் இனி நமக்குச் சொந்தம். இது காசி விசுவநாதருடைய விசேஷமான ஸ்தலம். சிவனுடைய நாம உச்சாரணை செய்துகொண்டு கோவிலினுள் போவோம்.

ராகம்; மாண்டு (மூவரும்) தாளம்: ஆதி

காலகால காமதகன காசிநாத பாஹிமாம்
விசாலாக்ஷி அம்ப சகித விஸ்வநாத ரக்ஷமாம்

(மூன்று தடவை பாடவும்)

ஹரிச்சந்திரன்: காசியம்பதி கண்ணுதலே, விசுவத்துக் கெல்லாம் நாதா, உன்னைத் தஞ்சமடைகிறோம். கோடானுகோடி ஜீவராசிகளை நீ படைத்துக் காத்துத் துடைத்து, மறைத்து, அனுக்கிரகித்து அருளுகின்றனை. உனது திருவடிகளைத் தொழுகின்றோம். எங்களுக்கு வாய்த்துள்ள கஷ்டநஷ்டங்களெல்லாம் உனது திருவருளுக்குப் புறம்பானவைகளல்ல. எங்களுக்கு மேலும் வருகிற இன்பதுன்பங்களை யெல்லாம் அமைதியோடு ஏற்றுக்கொள்ளுகிறோம். அறநெறியினின்று நாங்கள் அணுவளவாவது மாறாதிருக்கும்படி நீ அனுக்கிரகம் செய்வாயாக. வினைப்பயனாகி எங்களுக்கு வாய்த்துள்ள சோதனைகளைக் குறித்து நாங்கள் மனக்கிலேசம் அடைய மாட்டோம். வினைப்பயனை வெல்லுவதற்கான மன உறுதியைக் கொடுத்தருள்வாயாக. உனது அருளைத் துணையாகக்கொண்டு வெல்லுதற்கரிய கொடிய வினைகளையும் வெல்லுவது எங்களுக்கு எளிதாகும்.

சந்திரமதி: தேவாதி தேவனே, மும்மூர்த்திக்கும் முதல்வா, பல பிறவிகளில் நாங்கள் செய்துள்ள பாபங்களை யெல்

லாம் பரிகரித்து அருள்வீராக. அடியேங்கள்மீது அனுக்கிரகம் வைப்பீராக. என் கணவர் சத்திய விரதத்தினின்று தவருதிருக்குமாறு கருணைபுரிவீராக. பதிவிரதா தர்மத்தினின்று நான் இம்மியளவும் பிசகாதிருக்குமாறு அருள்புரிவீராக. சின்னஞ் சிறுவனை தேவதாஸன் நாங்கள் செய்துள்ள தீவினையை முன்னிட்டுத் துன்புருதிருக்கும்படி காப்பாற்றியருள்வீராக.

தேவதாஸன் : காசி விசுவநாதா, எங்கள் எல்லோரையும் காப்பாற்றுவாயாக.

காட்சி 7

இடம் : காசி

(காசியில் காசுக்கு வகையறியாது திகைத்தல்)

ஹரிச்சந்திரன் : மாதே, விசுவாமித்திர முனிவருக்கு நான் வாக்குக் கொடுத்தபடி பணத்தைச் செலுத்த வேண்டிய நாள் வந்துவிட்டது. சொன்ன சொல் தவறினல் நான் பொய்யனகப் புவியில் வாழ்ந்திருப்பதைவிட ஒழிந்து பட்டுப் போவது உத்தமம். முனிவருக்கு ஆயிரம் பொற்காசுகள் கொடுத்தாக வேண்டும். இப்பெரிய தொகையை எங்குச் சென்று எப்படிப் பெறுவது? யாரிடம் யாசிப்பது? அல்லது கடன் வாங்குவது? கடன் வாங்கினல் வீணில் தொல்லையைப் பெருக்குவோம். யாசகம் செய்து நிதி திரட்டுவது நம் தர்மம் அன்று. வாக்குறுதி செய்தபடி நிதியைத் திரட்டி வழங்குவதே நமது தர்மம் ஆகும். தர்மத்தினின்று வழுவிவிடுவேனே என்னும் ஐயம் என் உள்ளத்தை வாட்டுகிறது.

சந்திரமதி: நாதா, தங்கள் உள்ளத்தை வாட்டுகிற கருத்தை நான் நன்கு அறிகிறேன். வாய்மையினின்று நீங்கள் ஒருபொழுதும் வழுவலாகாது. சத்தியத்துக்கு மேலான தர்மம் இல்லை. நம் உயிரிருக்கும் வரையில் சத்தியத்தினின்று நாம் பிசகலாகாது. பெண்ணொருத்தி செய்யவேண்டிய கடமையை நான் முடித்தாகிவிட்டது. தமக்காகவென்று தனயன் ஒருவனை நான் ஈன்றெடுத்துள்ளேன். ஆக, என் கடமை நிறைவேறிவிட்டது. ஆ! மேலும் எப்படி மொழிவேன்! (புலம்பல்) என்னை யாருக்காவது அடிமையாக விற்று, வருகிற விலையைக் கொண்டு ரிஷிக்குத் தாம் நிறைவேற்ற வேண்டிய கடனைத் தீர்த்துவிடுங்கள்.

ஹரிச்சந்திரன்: ஆ! நமது நிலைமை இத்தகைய பரிதாபகரமானதாய்விட்டதா! வாழ்க்கைத் துணையாகிய உன்னை விலைபொருளாக நான் விற்பதா? இக்கருத்தை வெளியிட உனக்கு எங்ஙனம் மனம் துணிந்தது?

தேவதாஸன்: அம்மா, என்னால் பசியைப் பொறுக்க முடியவில்லை. என் நாவு உலர்கிறது; கண் சுழல்கிறது; உண்ண ஏதாவது பண்டம் வாங்கித் தாருங்கள்.

ஹரிச்சந்திரன்: ஐயோ! நம் வினைப்பயன் இப்படி வந்து மூண்டுவிட்டதா!

(கோபாவேசத்துடன் விஸ்வாமித்திரர் வருகிறார்)

விஸ்வாமித்திரர்: ஹே, ஹரிச்சந்திரா! கோழை போன்று கதறிக்கொண்டிருக்க வேண்டாம். ஆண்மை படைத்தவனாக நிமிர்ந்து நில். ஒரு பெண்பாலைப்போன்று அழுதுகொண்டிருந்தால் நீ கடனைக் கட்டமுடியாது. சொன்ன சொல்லைக் காப்பது உன் கருத்து என்றால்

எனக்குச் செலுத்த வேண்டிய நிதியை இப்பொழுதே கொடுத்துவிடு; அல்லது நீ சத்திய விரதன் அல்ல என்பதை ஒத்துக்கொள். அப்படி ஒத்துக்கொண்டால் நீ பட்டுள்ள கடனினின்று உன்னை இப்பொழுதே விடுவித்துவிடுகிறேன்.

ஹரிச்சந்திரன் : முனி சிரேஷ்டரே, நான் சிறிது மனம் குழம்பியிருக்கிறேன் என்பது உண்மையாயினும் என் ஆண்மையை நான் காற்றில் விட்டவன் அல்லன். சத்திய விரதத்தினின்று நான் இம்மியளவும் பிசகேன். 'இயல்வது கரவேல்' என்பது வாழ்க்கைக் கோட்பாடு. என்னால் செய்து முடிக்கக் கூடியதை சாதிக்காது நான் விட்டுவிடுவேனாகில் சத்தியத்தினின்று வழுவியவன் ஆவேன். எப்படியும் சொன்ன சொல்லை நிறைவேற்றி விடுவேன் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு. சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு சூரியன் பிரகாசிக்கிறான். சத்தியத்தை அடிப்படையாகக்கொண்டு நிலமகள் நிலவுகிறாள். சத்தியம் பரம தர்மமாகிறது. சொர்க்கலோகமும் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஆயிரம் அசுவமேத யாகத்தினின்று வரும் புண்ணியம் சத்தியத்துக்கு நிகராகாது. நானும் சத்தியத்தினின்று இம்மியளவும் பிசகேன்.

விஸ்வாமித்திரர் : ஹரிச்சந்திரா, உன்னுடைய பேச்செல்லாம் மிகப் பெரியதாயிருக்கிறது. பின்பு, பணம் எங்கே? இன்று அஸ்தமனத்திற்குள் எனக்குச் சேர வேண்டிய செல்வத்தைச் செலுத்தாவிட்டால் உன்னைப் பொய்யன் என்று குற்றம் சாட்டி, உனக்குச் சாபமும் கொடுக்கப் போகிறேன். உன் வாயிலிருந்து வருகிற

வார்த்தைகளெல்லாம் பொய்யாகப் போகட்டும் என்கின்ற சாபத்தை உன்மீது சுமத்தப் போகிறேன்! சூரியன் வானத்தில் இலங்கிக் கொண்டிருக்குமளவுக்கு உனக்கு காலாவதி தருகின்றேன். உன்னைத்தேடி நான் காசியில் அலையமாட்டேன். விசுவநாதர் ஆலயத்திற்கு எதிரிலிருக்கும் மண்டபத்தில் நான் அமர்ந்திருப்பேன். இன்று அஸ்தமனத்திற்குள்ளாக ஆஸ்தியைக்கொண்டு வந்து செலுத்திவிடு. இல்லையேல் சாபத்துக்கு ஆளாவாய்.

ஹரிச்சந்திரன்: முனிபுங்கவா, நீங்கள் முனிந்துகொள்ள வேண்டாம். சாந்த சொரூபியாயிருங்கள். எப்படியும் அஸ்தமனவேளைக்கு முன்பே நான் தங்களுக்குக் கட்ட வேண்டிய கடனைத் திரட்டிக்கொண்டு வந்து செலுத்திவிடுவேன்.

விஸ்வாமித்திரர்: மிக நன்று; உன் திறனை இன்னும் சில மணி நேரங்களில் நான் பார்த்து விடுகிறேன். நான் இருக்குமிடம் தேடி நீ பணமும் கையுமாகப் பொழுது படிதற்கு முன்பு வாராவிடில் உன்னைப் பொய்யனுக்குவேன்.

(போகிறார்)

ஹரிச்சந்திரன்: பிராணசகீ, இனி நாம் குழம்பிக்கொண்டிருப்பதற்கு அவகாசம் இல்லை. உயிரிருக்கும் வரையில் நாம் சத்தியத்தினின்று பிசகலாகாது; ஒழுக்கத்தினின்றும் பிசகலாகாது. நாம் நாட்டை மனமுவந்து கொடுத்து விட்டோம். படைத்திருந்த செல்வத்தையெல்லாம் மனமுவந்து பரித்தியாகம் செய்துவிட்டோம். இனி நம் மூவர்க்கும் சொந்தமாயிருப்பது நமது உடலே. உடலோ சாசுவதமாக நம்மோடிருப்பதன்று,

எப்பொழுது வேண்டுமானலும் அது அழிந்துபட்டுப் போம். ஆனல் சத்தியத்தை விடாது கடைப்பிடித்தால் சத்தியம் நம்மைக் காக்கும். அடிமைகளாக நம் மூவரையும் யாருக்காவது விலைக்கு விற்று வேண்டிய பொன்னைப் பிரித்தெடுத்து முனிவருக்குக் கட்ட வேண்டிய கடனைத் தீர்த்துவிடுவோம்.

சந்திரமதி: ஆம் பிராணநாதா, இனி வீண் பொழுது போக்க நேரமில்லை. யாருக்காவது நம்மை அடிமைகளாக்கிக்கொண்டு அதினின்று கிடைக்கும் வருவாயினல் கடனைத் தீர்த்துவிடுவோம்.

ஹரிச்சந்திரன்: (ஒரு வைக்கோலை எடுத்து சந்திரமதியின் தலையின்மீது வைத்துக்கொண்டு) காசிவாசிகளே! எனது விண்ணப்பத்தைக் கேளுங்கள். நான் கொஞ்ச காலம் வரையில் அயோத்திக்கு அரசனயிருந்தேன். என் பெயர் ஹரிச்சந்திரன். நான் மனமுவந்து எனது நாட்டை விஸ்வாமித்திர மஹரிஷிக்குக் கொடுத்துவிட்டேன். அதைத்தவிர மற்றொரு விதத்தில் நான் அவரிடம் கடன் பட்டவனயிருக்கிறேன். அக்கடனைத் தீர்க்க வேறு வழியொன்றும் இல்லாததினல் என் மனைவி சந்திரமதியையும், மைந்தன் தேவதாஸனையும் அடிமைகளாக விற்கிறேன். நான் கோருகிற விலையைக் கொடுத்து அவர்களை அடிமைகளாக வாங்க யாரேனும் முன்வர மாட்டீர்களா?

(போகிருர்கள்)

காட்சி 8

இடம்: காசி (ஊரார் அபிப்பிராயம்)

முதல் மனிதன்: பார்த்தாயா வேடிக்கையை! காசியில் இப்படி முன்பு எப்பொழுதாவது நிகழ்ந்ததை நான் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை.

2வது மனிதன்: ஆம்! மடையன் ஒருவன் தன் பெண்சாதியையும், பிள்ளையையும் விலை கூறிக்கொண்டு போகிறான்.

3வது மனிதன்: அத்தகைய முட்டாள் யார்?

4வது மனிதன்: (வந்து சேர்ந்துகொண்டு) யார்? ஹரிச்சந்திரனைப் பற்றியா பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? அவன் மடையனுமல்ல; முட்டாளுமல்ல. சொன்ன சொல் மாறாதவன். விஸ்வாமித்திர மஹரிஷிக்குத் தனது நாட்டைத் தானமாகக் கொடுத்துவிட்டான். அதற்கு மேல் தான் பட்ட கடனைத் தீர்ப்பதற்கு மனைவியையும் மகனையும் விலை கூறிக்கொண்டு போகிறான்.

முதல் மனிதன்: அத்தகையவனை முட்டாள் என்று சொல்லாது வேறு என்ன கூறி அழைப்பது? சொன்ன சொல்லைக் காப்பது சரிதான். ஆனால் அதை முன்னிட்டு வரம்பு கடந்து வம்பை விலைக்கு வாங்கித் தலையில் போட்டுக்கொள்வதா?

2வது மனிதன்: இந்த ஹரிச்சந்திரன் தன்னால் கடனைக் கட்ட முடியவில்லை என்று சொன்னால் அவனை விட்டு விடுவதாக அந்த மஹரிஷி சொல்லுகிறாராம். அப்படி ஒரு வார்த்தை சொல்லிவிடுவதற்கு இவனுக்கு என்ன கேடு? பெண்டாட்டியையும் பிள்ளையையும் வைத்துப்

பிழைக்கத் தெரிந்திருந்தால் இப்படி இவன் அறிவு கெட்டு அலைந்து திரிவானா!

3வது மனிதன் : மனிதனுக்குக் கஷ்டம் வருவது சகஜம். ஆனால் என்னதான் கஷ்டம் வந்தாலும் பெண்சாதியையும் பிள்ளையையும் ஆடுமாடு விற்பது போன்று விற்கலாமா?

முதல் மனிதன் : அந்தக் குழந்தையைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது.

2வது மனிதன் : அந்தப் பெண்பாலைப் பார்த்தால் அவள் லக்ஷ்மிதேவிக்கு நிகராய் விளங்குகிறாள். அத்தகையவளை விலைக்கு விற்க இவன் எப்படித்தான் துணிந்தானோ தெரியவில்லை.

3வது மனிதன் : தலைவிதி யாரை ஐயா விட்டுவைக்கிறது? அவரவர் படவேண்டிய வினைப்பயனைப் பட்டுத்தானே ஆகவேண்டும்!

காட்சி 9

இடம்: காசி (மூவரும் அடிமையாதல்)

ஹரிச்சந்திரன் : காசிவாசிகளே! எனது விண்ணப்பத்தைக் கேளுங்கள். நான் கொஞ்சகாலம் வரையில் அயோத்திக்கு அரசனாயிருந்தேன். என் பெயர் ஹரிச்சந்திரன். நான் மனமுவந்து எனது நாட்டை விஸ்வாமித்திர மஹரிஷிக்குக் கொடுத்துவிட்டேன். அதைத்தவிர மற்றொரு விதத்தில் நான் அவரிடம் கடன் பட்டவனாயிருக்கிறேன். அக்கடனைத் தீர்க்க வேறு வழியொன்றும் இல்லாததினால் என் மனைவி சந்திரமதியையும் மைந்தன் தேவதாஸனையும் அடிமைகளாக

விற்கிறேன். நான் கோருகிற விலையைக் கொடுத்து அவர்களை அடிமைகளாக வாங்க யாரேனும் முன்வர மாட்டீர்களா?

காலகண்டன் : ஓய் மனிதா, உன் செயல் விந்தைக்குரியதாயிருக்கிறது. இருக்கட்டும். என் இல்லத்திற்கு வேலைக்காரி ஒருத்தி வேண்டியிருக்கிறது. சிறுவன் ஒருவனைக் கையாளாக அமர்த்த வேண்டியதும் அவசியமாயிருக்கிறது. நீ விலைக்கு விற்க எண்ணியிருக்கிற இவ்விருவரையும் நான் வாங்கவேண்டும். இவள் என் வீட்டு வேலைகளை நன்ருகச் செய்வாளா? எனக்கு விசிறி வீசவும், கைகால் பிடிக்கவும், சில்லறை வேலைகள் செய்யவும் இச்சிறுவனுக்கு இயலுமா?

ஹரிச்சந்திரன் : ஆம், பெரியவரே. நீங்கள் எதிர்பார்க்கிறபடி உங்கள் வீட்டு வேலைகளைத் தாயும் மகனும் ஆகிய இவர்கள் இருவரும் மிகத் திறமையாகச் செய்வார்கள். இவள் எனக்கு வாழ்க்கைப்பட்டுள்ள மங்கை; பதிவிரதா தர்மத்தினின்று சிறிதேனும் பிசகாதவள். அடிமையாக அவள் விற்கப்படுகிருள் என்ருலும் அறநெறியினின்றும் ஒழுக்கத்தினின்றும் அவள் இம்மியளவும் பிசகாதவள். தர்மப்படி என்னென்ன வேலைகளைச் செய்யவேண்டும் என்னும் நியதி ஏற்பட்டிருக்கிறதோ அந்தந்த வேலைகளையெல்லாம் இவள் ஒழுங்காகச் செய்வாள். இச்சிறுவனும் அப்படியே உமக்குக் கையாளாக இருப்பான்.

காலகண்டன் : சரி, நம் வீட்டு வேலைக்கு இவர்கள் இருவரும் ஒத்து வருவார்கள் போன்று தெரிகிறது. இவர்கள் பொருட்டு நீ கோரும் விலை யாது?

ஹரிச்சந்திரன் : ஐயனே, நான் இப்பொழுது ஒரு நெருக்கடியில் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். ஓராயிரம் பொன் எனக்குக் கிடைத்தால் நான் பட்டுள்ள கடனைத் தீர்க்க அது உதவும்! விலை மதிப்புப்போட முடியாத இவர்கள் இருவரையும் அவசரத்தை முன்னிட்டு இச் சிறிய விலைக்கு விற்க நான் துணிகிறேன்.

காலகண்டன் : அடேயப்பா, இவ்வளவு பெரிய விலை கொடுத்து இவர்களை நான் வாங்குவதா? பிறகு, இவர்கள் நான் எதிர்பார்க்கிறபடி நன்கு வேலை செய்யாது வீண்காலம் போக்கிக்கொண்டிருப்பார்களானால் அது எனக்குப் பெரிய நஷ்டமாகும். விலையைக் கொஞ்சம் குறைக்கலாகாதா?

ஹரிச்சந்திரன் : ஐயனே, என்னதான் விலைகொடுக்க நீங்கள் ஆயத்தமாயிருக்கின்றீர்கள்?

காலகண்டன் : இந்த வேலைக்காரியின் பொருட்டு ஐந்நூறு பொன்காசும், இந்தச் சிறுவன் பொருட்டு இருநூற்றைம்பது பொன்காசும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன். சம்மதமானால் இப்பொழுதே தொகையை ஏற்றுக்கொள். இவர்களை என்னிடம் ஒப்படைத்து விடு. இதற்குச் சம்மதமில்லாவிட்டால் நீ உன் போக்கில் போகலாம்.

ஹரிச்சந்திரன் : ஆம், தனித்து வாராது துரதிர்ஷ்டம். எப்படியாவது ஆயிரம் பொன் திரட்டியாக வேண்டும். பற்றுக்குறைக்கு என்னை யாரிடமாவது விலைக்கு விற்றுத் தேவையான நிதியைத் திரட்டியாக வேண்டும். ஐயனே, நீங்கள் கூறுகிறபடி எழுநூற்றைம்பது பொற்காசுகளையாவது மனமுவந்து தாருங்கள். அதிக விலை

கொடுத்துவிட்டேன் என்று பின்னல் நீங்கள் ஒரு பொழுதும் வருந்தமாட்டீர்கள். நீங்கள் கொடுக்க இசைகிற விலைக்கு மேல் இவர்கள் மெய்வருந்த உங்களுக்குப் பாடுபடுவார்கள்.

காலகண்டன்: சரி, இதோ தொகையை ஏற்றுக்கொள். சத்தியம் செய்து இவ்விருவரையும் அடிமைகளாக என்னிடம் ஒப்படைத்துவிடு.

ஹரிச்சந்திரன்: தக்க தருணத்தில் எனக்கு உதவிபுரிய வந்த ஐயனே, சத்தியமாக உங்களிடம் சொல்லுகிறேன். இப்பொழுதிருந்து என் மனைவியும் மைந்தனும் ஆகிய இவர்கள் இருவரும் உமக்கு அடிமைகள் ஆகின்றனர். நீங்கள் இடுகிற வேலைகளையெல்லாம் அவர்கள் தங்கள் முழு ஆற்றலுடன் செய்து வருவார்கள். தர்மத்துக்கு உடன்பாடான முறைகளில் நீங்கள் இவர்களிடமிருந்து வேலை வாங்கிக்கொள்ளலாம். இதோ இவர்களை உங்களிடம் ஒப்படைத்து விட்டேன்.

சந்திரமதி: நாதா, நமது லட்சியத்தை நிறைவேற்றுதற் பொருட்டு மணம் புரிந்தது முதல் இதுவரையில் உங்களிடமிருந்து பிரியாதிருந்த நான் இப்பொழுது பிரிகிறேன். காசி விசுவநாதன் நம்மைக் காப்பாற்றுவாராக. இனி எப்பொழுது, எந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஒருவரை யொருவர் சந்திக்கப் போகிறோமோ அறியோம். எல்லாம் ஈசன் செயல்.

தேவதாசன்: (அழுதுகொண்டு) அப்பா, அம்மாவுடன் நான் போய்வருகிறேன்.

(இருவரும் ஹரிச்சந்திரன் பாதத்தை தொட்டு வணங்கி விட்டு காலகண்டனுடன் போகின்றனர்.)

ஹரிச்சந்திரன் : காசி வாசிகளே, நான் சொல்லும் ஒரு விண்ணப்பத்துக்குச் சிறிது செவிசாயுங்கள். அயோத்திக்கு அரசனுயிருந்த ஹரிச்சந்திரனுகிய நான் ஒரு நெருக்கடியில் எனது ராஜ்யம் முழுதையும் விஸ்வாமித்திர முனிவருக்கு தானமாகக் கொடுத்து விட்டேன். மேற்கொண்டும் நான் அவருக்குக் கடன் பட்டிருக்கிறேன். இன்று அஸ்தமனத்துக்குள்ளாக அவருக்கு நான் ஆயிரம் பொற்காசுகள் செலுத்தியாகவேண்டும். என் மனைவியையும் மகனையும் விற்று எழுநூற்றைம்பது பொற்காசுகள் பிரித்தெடுத்தாய் விட்டது. இன்னும் இருநூற்றைம்பது பொற்காசுகள் தேவையாயிருக்கின்றன. அதற்குமேல் பொன்னுசை எனக்கு இல்லை. யாரேனும் ஒருவர் என்னை விலைக்கு ஏற்றுக்கொள்ளுங்கள். விலையில் பேரம்பேச நேரமில்லை. இருநூற்றைம்பது பொற்காசு கொடுத்து என்னை ஏற்றுக்கொள்ளுங்கள். மஹரிஷியிடம் நான் செய்து கொண்ட உடன் படிக்கையிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டு வேலைக்காரனுக உங்களிடம் வந்து சேருவேன்.

வீரபாகு : அப்படியா, இது ஏதப்பா நூதனமான வியாபாரமாயிருக்கிறது! உனக்கு நான் இப்பொழுதே இருநூற்றைம்பது பொற்காசுகள் தருகிறேன். உடன் படிச்கையினின்று உன்னை விடுவித்துக்கொண்டு என்னிடம் வேலைக்காரனுக வந்து சேருவாயா? கொடுக்கிற எந்த வேலையையும் கிரமமாகச் செய்வாயா?

ஹரிச்சந்திரன் : காசி வாசியே, மக்களுக்குப் பயன்படுவதாயிருக்கிறதும் தர்மத்துக்கு ஒத்ததாயிருக்கிறதுமாகிய எந்த வேலையாயினும் நான் வஞ்சகமில்லாது திறமையுடன் செய்து முடிப்பேன்; இது உறுதி. எனக்

குத் தேவையாயிருக்கும் பணத்தை இப்பொழுதே கொடுத்து உதவி புரிவீராக.

வீரபாகு: உன் பேச்சை நம்பி இதோ பணத்தைச் செலுத்து கிறேன். சொன்ன சொல் தவருது என்னிடம் வந்து சேர். காசியில் கீழ்ப்புறத்திலிருக்கும் சேரிக்கு வந்து வீரபாகுவின் வீடு எங்கே என்று கேள். என் வீட்டை அங்கு யாரும் உனக்குக் காட்டிக் கொடுப்பார்கள். பாக்கி விஷயத்தைப் பிறகு பேசிக்கொள்வோம். இப்பொழுது உனக்கும் அவசரம், எனக்கும் அவசரமா யிருக்கிறது. போய் வருகிறேன்.

ஹரிச்சந்திரன்: அப்பா, உனக்கு மிகவும் நன்றி. என்னை ஒரு நெருக்கடியினின்று காப்பாற்றிய உம்மை ஒரு நாளும் மறவேன். உமக்கு நன்றியுடையவனுயிருக் கிறேன். விரைவில் உமது வீட்டுக்கு வேலைக்காரனுக நான் வந்து சேருவேன். இதோ போய் வருகிறேன்.

காட்சி 10

இடம்: காசி விசுவநாதர் கோவில் பக்கம்

(விஸ்வாமித்திரரை ஹரிச்சந்திரன் சந்தித்து நிதியைச் செலுத்துகிருன்.)

விஸ்வாமித்திரர்: ஹரிச்சந்திரா, வந்துவிட்டாயா? ஒரு வேளை நீ கண்ணுக்குத் தென்படாமலேயே இருந்து விடுவாயோ என்று எண்ணினேன். நான் எண்ணிய தற்கு மாருக நீ வந்துவிட்டாய் மிக நன்று.

ஹரிச்சந்திரன்: முனிபுங்கவா, என்மீது நீங்கள் இப்படியும் சந்தேகம் கொள்ளலாமா? சொன்ன சொல்லைக் காப்பாற்ருது நான் உயிர் வாழ்ந்திருப்பேனு?

விஸ்வாமித்திரர் : அது சரி. சூரியன் அஸ்தமிப்பதற்கு இன்னும் அரைமணி நேரம் பாக்கியிருக்கிறது. அதற்குள்ளாக நீ எனக்கு சேரவேண்டிய நிதியைச் செலுத்தப் போவதில்லை. பணம் கொடுக்க உன்னால் இயலவில்லை என்று இயம்புதற்குத் தானே இம்மாலை வேளையில் இங்கு நீ வந்துள்ளாய்.

ஹரிச்சந்திரன் : அப்படியல்ல தேவே, உங்களுக்குரிய தொகையை நான் பிரித்தெடுத்தாய் விட்டது. இதோ தங்களுக்குரிய ஆயிரம் பொற்காசுகள். கிருபை கூர்ந்து இதை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு நான் வாக்குக் கொடுத்தபடி கடைசி நாளாகிய இன்று சூரியாஸ்தமனத்துக்கு முன்பே என் கடனைத் தீர்த்து விட்டேன். நான் சொன்ன சொல் தவறாதவன் என்பதையும் நிரூபித்து விட்டேன். இனி, நான் தங்களுக்கு எவ்விதத்திலும் கடமைப்பட்டவன் அல்லன். சத்திய விரதத்தை நிறைவேற்றுதற்கென்று தெய்வாதீனமாக உங்களுடன் பிணைக்கப்பட்டிருந்த நான் இப்பொழுது விடுவிக்கப்பட்டவன் ஆகிறேன். என்னை ஆசீர்வதித்து விடை கொடுத்தனுப்புங்கள். எனது புதிய எஜமானனிடம் நான் விரைவில் போய்ச் சேர்ந்தாக வேண்டும்.

விஸ்வாமித்திரர் : (பொற்காசை எண்ணிப் பார்த்தான பிறகு) ஹரிச்சந்திரா ! உன்னை நான் மிகவும் பாராட்டுகிறேன். வாக்குக் கொடுத்தபடி எனக்குச் சேரவேண்டிய செல்வத்தை நீ செலுத்தி விட்டாய். உன் மனைவி எங்கே? மகன் எங்கே? உனக்குப் புதிய எஜமானன் யாரோ வாய்த்திருக்கிறான் என்கின்றாயே ! இது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. எப்படி இந்த நிதியைத் திரட்டினாய்? வேறு யாருக்காவது கடன்பட்டவன் ஆய் விட்டாயா? வரலாற்றை எடுத்து விளக்கு கேட்போம்.

ஹரிச்சந்திரன் : தபோதனரே, நான் இப்பொழுது யாருக்கும் கடன்பட்டவன் அல்லன். என்னிடம் எஞ்சியிருந்ததை விலைக்கு விற்றுத் தங்களுக்குச் சேரவேண்டிய கடனைக் கொடுத்தாய் விட்டது.

விஸ்வாமித்திரர் : வெறும் ஆளாகத்தானே உன்னை நான் அயோத்தியினின்று அனுப்பிவைத்தேன். எனக்குத் தெரியாது ஏதாவது ரத்தினம், ஆபரணம் முதலியவற்றை அயோத்தியினின்று இங்கு எடுத்துக்கொண்டு வந்து விலைக்கு விற்றாயா, என்ன?

ஹரிச்சந்திரன் : ஜடப்பொருள்களாயிருக்கிற ரத்தினத்தையோ ஆபரணத்தையோ அயோத்தியினின்று நான் எடுத்து வரவில்லை. தாங்களறிய, உலகமறிய நாங்கள் மூன்று உயிர்கள் பொருளொன்றுமில்லாது புறப்பட்டு வந்தோம். எங்கள் உடல் வாழ்க்கை மூவருக்கும் சொந்தமாயிருந்ததைத் தாங்கள் அறிவீர்கள். அந்த உடல் வாழ்க்கையை மனமுவந்து மற்றவர்களுக்கு விலைக்கு விற்றுவிட்டோம். அதைக் குறித்துத் தாங்களோ, உலகில் வேறு யாரோ ஆட்சேபம் செய்யமுடியாது. அப்படி எங்கள் வாழ்க்கையை விற்றுத் தங்களுக்குரிய கடனைத் தீர்த்திருக்கிறோம்.

விஸ்வாமித்திரர் : சொன்னசொல் தவறாத புருஷா, உனது துணிவை நான் பாராட்டுகிறேன். ஆனால் நீ இப்பொழுது பகர்வது எனக்கு விளங்கவில்லை. நான் அறிந்து கொள்ளும்படி விஷயத்தை தெளிவாக எடுத்துச்சொல்லு.

ஹரிச்சந்திரன் : மகானுபாவரே, சந்திரமதியையும் தேவதாஸனையும் காலகண்டன் என்னும் காசி பிராம்மணர்

ஒருவருக்கு அடிமைகளாக்கி அந்தணரிடமிருந்து எழு நூற்றைம்பது பொற்காசுகளைப் பிரித்தெடுத்தேன். எனக்கு மனைவி, மைந்தனுகை இருந்தவர்கள் இனி, கால கண்டனுக்கு அடிமைகளாயிருந்து அன்புடனும் ஊக்கத் துடனும் பணியாற்றுவார்கள். போதாத பணத்துக் காக என்னை நான் வீரபாகு என்னும் புலையனுக்கு விற்றுவிட்டேன். அவன் மனமுவந்து இருநூற்றைம் பது பொற்காசுகள் கொடுத்து என்னைத் தனக்குரிய வன் ஆக்கிக்கொண்டான். நான் விரைவில் அவனிடம் சென்று அவன் இடுகிற பணியைப் புரிந்தாகவேண்டும். அப்படிப் பணிபுரிதற்கென்று துணிந்துள்ள நாங்கள் மூவரும் எங்கள் பணிவிடைகளை வஞ்சகமின்றிப் புரிந்து வரும் வரையில் நாங்கள் யாருக்குமே கடமைப் பட்டவர்கள் அல்லோம்.

விஸ்வாமித்திரர் : ஹரிச்சந்திரா, உன் போக்கு விந்தைக் குரியதாயிருக்கிறது. வேண்டுமானுல் உன்னை நீ யாருக் கேனும் அடிமையாக்கிக்கொள்ளலாம். உன் மனைவி யையும் மைந்தனையும் கால்நடைகள் போன்று பிறர்க்கு விலைக்கு விற்பதற்கு உனக்கு யார் உரிமை கொடுத் தார்கள்? நீ தர்மத்தினின்று இப்பொழுது பிறழ்ந்து விட்டவன் ஆய் விட்டாய் அல்லவா?

ஹரிச்சந்திரன் : மாமுனிவரே, எங்கள் மூவருடைய வாழ்க்கை எங்களுக்கே சொந்தம். அதில் உரிமை பாராட்டுதற்கு யாருக்கும் அதிகாரமில்லை. மூவருள் கணவன் வேறு, மனைவி வேறு, மைந்தன் வேறு என்று நாங்கள் நினைத்தது கிடையாது. கொண்டுள்ள விர தத்தை நிறைவேற்றுதற் பொருட்டு எங்களுடைய வாழ்க்கையை எத்தகைய கஷ்ட தசைக்கும் உட்படுத்த

நாங்கள் ஆயத்தமாய் இருக்கின்றோம். அங்ஙனம் செயலிலும் நாங்கள் இறங்கிவிட்டோம். தர்மத்தினின்று நாங்கள் இம்மியளவும் இதுகாறும் பிசகியது கிடையாது. இனியும் பிசக மாட்டோம். எப்படியாவது சுக ஜீவனம் பண்ணிக்கொண்டிருந்தால் போதுமென்று நினைப்பவர்கள் ஒருவேளை தர்மத்தினின்று பிசகலாம். உயிரிருக்கும் பரியந்தம் சொன்ன சொல்படி சத்தியத்தைக் காத்து வாழ்ந்திருக்கத் தீர்மானித்த எங்களுக்குக் கஷ்டதசையைக் குறித்து மனக்கசப்பு இல்லை. எங்களால் இயன்றதையெல்லாம் துணிந்து செய்து சத்திய விரதத்தினின்று வழுவாதிருப்போம். சத்தியத்தினின்று பிசகாதவர்களை அறநெறியினின்று பிசகியவர்கள் என்று நீங்கள் பேசுவது பொருந்தாது. விடைகொடுங்கள். மேலும் உங்களோடு பேசிக்கொண்டிருக்க எனக்கு அவகாசமில்லை. எனக்குப் பணம் கொடுத்தவர்களுக்குப் பண்புடன் பணியாற்ற இதோ போகிறேன். உங்களுக்கு நமஸ்காரம்.

(ஹரிச்சந்திரன் போகிறான்)

விஸ்வாமித்திரர் : (தமக்குத் தாமே) என்ன விந்தை இது! இந்திர லோகத்தில் இந்த ஹரிச்சந்திரனை சாமானிய மனிதன் என்று நான் எடுத்துரைத்தேன். என் கூற்று சரியல்ல என்று வசிஷ்டர் மறுத்துக் கூறினார். இதுவரையில் நான் செய்த சோதனைகளையெல்லாம் சமாளித்து ஹரிச்சந்திரன் சத்திய விரதனாகவே இருந்து வருகிறான். இனி வரப்போகிற கஷ்டமான சோதனைகளுக்கிடையில் சத்திய விரதத்தைக் காக்க இவனால் இயலுமா? நிகழ்வதையெல்லாம் மறைமுகமாய் இருந்து கவனித்து வருவோம்.

காட்சி 11

இடம் : காசி

(காலகண்ட ஐயன் கிரஹத்தில் சந்திரமதியும் தேவதாஸனும் புரியவேண்டிய பணிவிடைகள் அவர்களுக்கு விளக்கப் படுகின்றன.)

கமலாதேவி : ஏதோ காரியமாகக் கடைவீதிக்குச் சென்ற நமது அகமுடையார் அதோ வந்து கொண்டிருக்கின்ருர். அவரைப் பின்தொடர்ந்து யாரோ ஒரு மாதரசியும் சிறுவன் ஒருவனும் வந்துகொண்டிருக்கிருர்கள். அவர்கள் யாராக இருக்கக்கூடும்? நம் கணவனுர் இங்கு வந்ததும் விஷயம் விளங்கிவிடும்.

(காலகண்டனும் சந்திரமதியும் தேவதாஸனும் வருகிருர்கள்.)

கமலாதேவி : பட்டணத்திற்குள் சென்ற நீங்கள் ஏன் இத்தனை நேரம் வரவில்லை என்று நான் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கின்றேன். அசாதாரணமாக இவ்வளவு காலதாமதமாய் வந்ததற்குக் காரணம் யாதோ? தங்களுடன் வந்திருக்கும் இந்த அம்மையும் பிள்ளையாண்டானும் யாரோ? இதையெல்லாம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

காலகண்டன் : ஆம், நான் அகத்துக்குத் திரும்பிவரத் தாமதம் மிக ஆய்விட்டது. அதற்கெல்லாம் காரணம் தாயும் மகனும் ஆகிய இவர்கள்தாம். உனக்கு வீட்டு அலுவல்கள் பலவற்றைச் செய்து முடிப்பதற்கு இவர்கள் இருவரையும் அடிமைகளாக விலைக்கு வாங்கி வந்திருக்கிறேன்.

கமலாதேவி : ஐயோ, அடிமைகளா இவர்களைப் பார்த்தால் அடிமைத்தனத்துக்கு அருகதையுடையவர்களாகத்

தோன்றவில்லையே. இந்த அம்மாவைப் பார்த்தால் தோற்றத்தில் ஏதோ ஒரு மகாராணிபோன்று தென்படுகின்றாள். இவளா நமக்கு அடிமையாயிருந்து பணிவிடைகள் புரியப்போகின்றாள்! ஒருவேளை இவளுக்கு நாம் குற்றேவல் செய்துகொண்டிருக்கும்படி நேர்ந்து விடும்போல் தோன்றுகிறது. இருந்திருந்து இவர்களைத் தானா வீட்டுவேலையின் பொருட்டு விலைக்கு வாங்கிக் கொண்டு வரவேண்டும்? இந்தச் சிறுவனும் ஒரு ராஜகுமாரன் போன்று தென்படுகிறான். இதென்ன விபரீதம்! இவர்களை நீங்கள் ஏன் இங்குப் பிடித்துக் கொண்டு வந்தீர்கள்? இவர்கள் எப்படி உங்களுக்கு அடிமைகளாக வந்து வாய்த்தார்கள்? இவர்கள் பொருட்டு கிரயம் எவ்வளவு கொடுத்தீர்கள்?

காலகண்டன் : அதையேன் கேட்கின்றாய்? அதுதான் கொஞ்சம் அளவுக்கு மீறிப்போய்விட்டது. நான் கொடுத்த ஊதியத்தை உன்னிடம் கூறினால் அதைப் பற்றி நீ என்ன சொல்லுவாயோ தெரியவில்லை.

கமலாதேவி : சொல்லுங்கள் பார்ப்போம். அதைத் தெரிந்து கொள்ளத்தான் நான் ஆவல் கொண்டிருக்கிறேன்.

காலகண்டன் : இந்தப் பெண்பாலுக்காக ஐந்நூறு வராகனும், இச்சிறுவனுக்காக இருநூற்றைம்பது வராகனும் கொடுக்கவேண்டி வந்தது. அந்த மனிதனை ஒரு நெருக்கடியினின்று விடுவித்தற் பொருட்டு கொஞ்சம் அதிகமாகத்தான் விலை கொடுத்து விட்டேன்.

கமலாதேவி : இதென்ன விபரீதம்! பணத்தின் அருமை தெரிந்தவர்கள் யாராவது இப்படி அசட்டுத்தனமாய் அதை விரயம் செய்வார்களா? மாதம் ஐந்து ரூபாய் கொடுத்தால் போதுமானது. நல்ல வேலைக்காரி ஒருத்

தியை இக்காசி நகரில் மிக எளிதில் எப்பொழுது வேண்டுமானாலும் பெறலாமே!

சந்திரமதி: அம்மா, என் வரலாற்றைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன், கேளுங்கள். நீங்கள் உத்தேசித்தபடி நான் அயோத்தியாபுரிக்கு அரசியாக இருந்தேன். அதை ஆண்டு வந்த என் கணவர் ஹரிச்சந்திரன் விஸ்வாமித்திர முனிவருக்கு நாடு நகர் அனைத்தையும் தானமாகக் கொடுத்துவிட்டார். மேலும் அவருக்குக் கொடுப்பதாகக் கூறியிருந்த செல்வம் எங்கள் கைவசத்தில் இல்லை. சத்தியம் தவறாத என் கணவர் விஸ்வாமித்திரருக்குச் செலுத்துதற்குத் தமக்குத் தேவையாயிருந்த செல்வத்தில் பெரும் பகுதியை எங்களை உங்கள் வீட்டுக்கு விலைக்கு விற்றுப் பெற்றுள்ளார். நானும் என் மகனும் இனி உங்களுக்கு அடிமைகளே. நீங்கள் இட்ட வேலையை முழுமனதுடனும் முழு ஆற்றலுடனும் நாங்கள் இருவரும் செய்வோம். எங்களை முன்னிட்டுப் பணம் வீண்விரயம் ஆய்விட்டதென்று கவலைப்பட வேண்டாம். நம் எஜமானர் இப்பெரிய தொகையைத் தக்க தருணத்தில் செலுத்தியதற்காக என் கணவர் அவருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கின்றார். காலத்தில் செய்த இந்நன்றியை நாங்கள் ஒரு பொழுதும் மறக்க மாட்டோம். நான் செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் இப்பொழுது எடுத்து விளக்குங்கள். அவையாவையும் திறம்படச் செய்ய நான் ஆயத்தமாய் இருக்கிறேன்.

கமலாதேவி: நீ செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் நான் எடுத்துரைத்தால் நீ மலைத்துப்போய் விடுவாய். ஆயினும் அதையெல்லாம் இனி நீ செய்துதான் ஆக

வேண்டும். என்னவோ எங்கள் அகத்துப் பணம் வீண் விரயம் செய்யப்பட்டது என்றே எனக்குத் தோன்று கிறது. உன் பெயரென்ன? உன்னை நான் என்னென்று அழைப்பது?

சந்திரமதி: என் பெயர் சந்திரமதி. நீங்கள் 'சந்திரமதி' என்று அழைக்கலாம் அல்லது உங்களுக்குத் தோன்றி னல் வேறு ஏதாவது பெயரிட்டும் அழைக்கலாம்.

கமலாதேவி: உனக்குப் பெயர்கள் வைத்துக்கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. நான் சொல்லுகின்ற வேலைகளை யெல்லாம் கவனித்துக் கேட்டுக்கொள், சொல்லு கிறேன். காலை நான்கு மணிக்கு நாங்கள் எழுவதற்கு முன்பே நீ எழுந்திருக்க வேண்டும். பாத்திரங்களைத் துலக்கி விட்டு நீ கங்காஸ்நானம் செய்து கொண்டுவர வேண்டும். நம் அகத்தின் மூன்று பக்கங்களிலும் சாணமிட்டுக் கோலம் போடவேண்டும். அதன் பிறகு பூஜைப் பாத்திரங்களைத் துலக்க வேண்டும். நந்த வனத்திற்குச் சென்று உன் மகன் பூஜைக்கு மலர் கொய்து வரவேண்டும். நம் கைக்குழந்தை அழாதிருத் தல் பொருட்டு நீ பார்த்துக் கொள்ள வேண்டும். தேவை ஏற்படும் பொழுதெல்லாம் கடைக்குச் சென்று சாமான்கள் வாங்கி வரவேண்டும். பிற்பகலிலும் பாத் திரங்களை யெல்லாம் துலக்கித் துப்புரவு ஆக்க வேண் டும். இதையெல்லாம் ஒழுங்காகச் செய்வாயா?

சந்திரமதி: தாயே, இரண்டு மூன்று தினங்களில் உங்கள் கிரஹத்திலிருக்கின்ற அலுவல்களையெல்லாம் நான் அறிந்துகொள்ளுவேன். உங்கள் விருப்பப்படியே நான் பணியாற்றி வருகின்றேன். குறிப்பறிந்து, நீங் கள் ஆணையிடுதற்கு மேற்பட்டும் வேலைகள் செய்கி

றேன். எங்கள் பொருட்டு நீங்கள் செலவழித்த செல்வம் வீணைய்ப் போகவில்லை என்று விரைவில் உணர்வீர்கள்.

கமலாதேவி: மிக நன்று. உன் தரத்தை நான் இரண்டொரு நாளில் கண்டு கொள்வேன். இப்பொழுது நீ பாத்திரம் துலக்கப் போகலாம்.

காட்சி 12

இடம்: வீரபாகு வீடு

வீரபாகு: அந்த மனிதன் தன் பெயர் ஹரிச்சந்திரன் என்று சொன்னான். அவனுக்கு ஏற்பட்டிருந்த அவசரத்தை முன்னிட்டு நான் அவனுக்கு இருநூற்றைம்பது வராகனைத் தாராளமாகக் கொடுத்துவிட்டேன். கைவசத்தில் எஞ்சியிருக்கும் தொகை மிகக் குறைவு. நான் செய்தது ஒரு விதத்தில் முட்டாள்தனம். போகட்டும். அந்த ஆள் வந்து சேரட்டும். அதற்கெல்லாம் ஈடு அவனைக்கொண்டே எடுத்துவிடலாமென்று நினைக்கின்றேன்.

(ஹரிச்சந்திரன் வருகிறான்)

ஓ! சொன்ன சொல்படி விரைவில் வந்துவிட்டாயா? நீ இவ்வளவு விரைவில் வந்துவிட்டதைப் பற்றி எனக்குப் பெருமகிழ்வு. இப்பொழுது நீ என் காரியத்திற்கு ஓரளவாவது உதவுவாயா என்பதுதான் கேள்வி.

ஹரிச்சந்திரன்: என்னைக் காப்பாற்றிய அப்பா, அந்தக் கவலையெல்லாம் உங்களுக்கு வேண்டாம். நீங்கள்

எந்த வேலை கொடுத்தாலும் நான் அதைச் சரியாகச் செய்து முடிப்பேன்.

வீரபாகு: ஆமாம். நீ முன்போ பின்போ செய்திருந்த வேலையைக் கொடுத்தால் ஒருவேளை நீ ஒழுங்காக அதை முடிப்பாய். நீ கனவிலும் கண்டறியாத வேலை ஏதாவது ஒன்றைக் கொடுத்தால் நீ என்ன செய்வாய்?

ஹரிச்சந்திரன்: அப்பா, பிறக்கும்பொழுதே எல்லோரும் வேலை கற்றுக்கொண்டு இவ்வுலகில் பிறந்தவர்கள் அல்லர். மனமிருந்தால், அதற்கு ஒப்ப ஆற்றலிருந்தால் எந்த மனிதனும் எந்த வேலையை வேண்டுமானாலும் நன்கு செய்யலாம். எனக்கு மனமும் இருக்கிறது; ஆற்றலும் இருக்கிறது.

வீரபாகு: அதெல்லாம் சரிதான். உனக்குப் பிடிக்காத வேலையொன்று கொடுத்துவிட்டால் நீ என்ன செய்வாய்?

ஹரிச்சந்திரன்: அப்பா, ஒரு மனிதன் திருடலாகாது; பொய் சொல்லலாகாது. தர்மத்துக்கு ஒவ்வாத செயல் எதையும் புரியலாகாது. தர்மத்துக்கு ஒத்ததும் மக்களுக்குப் பயன்படுவதுமான எந்த வேலையை வேண்டுமானாலும் மகிழ்வுடன் செய்பவனே மனிதன். நீங்கள் இடும் வேலையைச் செய்ய இதோ நான் காத்துக் கொண்டிருக்கிறேன்.

வீரபாகு: நான் புலையன். எனக்கு நீ அடிமையாக வந்து வாய்த்திருக்கிறாய். சுடுகாட்டில் பிணம் எரிப்பது என் வேலை. என் உடல் சிறிது தளர்ந்திருப்பதை முன்னிட்டு அவ்வேலையை உன்னைக்கொண்டு வாங்கலாம் என்று எண்ணி என் தரத்துக்கு மேல் உனக்கு நான் விலை

கொடுத்துவிட்டேன். பிணம் எரிக்க நீ ஆயத்தமாய் இருக்கிருயா?

ஹரிச்சந்திரன் : இதில் என்ன சிரமம் இருக்கிறது அப்பா! சமூகத்திற்குப் பயன்படுகிற நல்ல தொண்டு தானே இது! அது மட்டுமல்ல; இது சிறந்ததொரு சிவனார் கைங்கர்யம். அவர் சம்ஹார மூர்த்தியாயிருந்து உயிர்களைக் காலக் கிரமத்தில் கரந்து விடுகிறார். பிணம் எரிப்பவன் அவருடைய பணிவிடையைச் செய்கின்றான். மகிழ்வுடன் இந்த வேலையை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

வீரபாகு : நீ இப்படிச் சொல்லுவது எனக்கும் என்னவோ திருப்தியாகத்தான் இருக்கிறது. எனக்குச் சேரவேண்டிய காசு பணம், வாய்க்கரிசி, மூன்று முழத் துண்டு ஆகியவைகளை யெல்லாம் முறையாக என்னிடம் கொடுப்பாயா? அல்லது அதில் ஏதாவது கோடு மாடுகளைக் கையாள ஆரம்பித்து விடுவாயா? இந்தத் தொழில் அத்தகையது. ஆகையினால்தான் எனக்குக் கொஞ்சம் சந்தேகம். நீ பொய் சொல்லாது எனக்குரியதை யெல்லாம் என்னிடம் கொடுத்து விடுவாயா?

ஹரிச்சந்திரன் : அப்பா, சத்தியத்துக்கென்றே என் உடல் பொருள் ஆவியெல்லாம் நான் ஒப்படைத்திருக்கிறேன். என்னைக் குறித்து நீங்கள் சிறிதும் சஞ்சலப்பட வேண்டாம். இது காறும் நீங்கள் செய்து வந்ததைவிட மிக அக்கரையுடன் ஸ்மஸான கிருத்தியத்தை நான் நிறைவேற்றிவைப்பேன். உங்களுக்குச் சேரவேண்டிய தகனக் காசையும், துணியையும், வாய்க்கரிசியையும் முறையாகச் சேகரித்து அவையாவையும் உங்களுக்கு உரிமையாக்குவேன். இனி, நீங்கள் கவலையற்று இருங்கள்.

ஒரு கடினமான நெருக்கடியினின்று என்னைக் காப்பாற்றிய தங்களுக்கு நான் எப்பொழுதும் கடமைப்பட்டிருக்கிறேன். நான் நன்றி மறவேன். ஸ்மஸானக் கடமைகளைச் செய்வதுடன் தளர்வுற்றிருக்கின்ற உங்களுக்கும் நான் பணிவிடைபுரிவேன்.

காட்சி 13

இடம் : காசி

(ஊரார் பேச்சு)

காசிவாசி 1 : விதி யாரைத்தான் விடுகிறது! ராஜாதி ராஜனக இருந்த ஹரிச்சந்திரன் கதியை எண்ணிப் பார்க்கிறபொழுது யாரையும்பற்றி ஒன்றுமே சொல்ல முடியாது.

காசிவாசி 2: அது சரி; விதி யாரையுமே விடாது என்கின்ருய். வாராத கஷ்டம் வந்துவிட்டால் இதெல்லாம் என் தலைவிதி என்று வருந்துவது உலகத்தவர் போக்கு. ஆனல் அந்த ஹரிச்சந்திரன் போக்கோ அலாதியாக இருக்கிறது. தான் ஒரு மன்னனயிருந்ததை அடியோடு மறந்துவிட்டான். பிணம் எரிக்கும் தோட்டி வேலைக்கே பிறந்தவன் போன்று இப்பொழுது ஆய்விட்டான். இப்படியும் ஒரு மனிதன் ஆய்விடக்கூடுமா என்று ஆச்சரியப்படவேண்டியதாயிருக்கிறது.

காசிவாசி 3 : நான் அந்த ஸ்மஸானத்துப் பக்கம் கேதார் நாதன் தரிசனத்திற்காக இப்படியும் அப்படியும் போவதுண்டு. தோட்டி என்ருல் அந்த மனிதன் அதற்

கென்றே பிறந்தவன் போன்று ஆய்விட்டான். சவம் எரிக்க வருகிறவர்களிடம் மயானப் பணத்தைக் கண்டிப்பாக வாங்குகிருன். வாய்க்கரிசி, முழத்துண்டு முதலியவைகளை முறையாகச் சேகரிக்கிருன். அவைகளையெல்லாம் அந்தப் புலையன் வீரபாகுவிடம் கொண்டு சேர்க்கிருன். சில வேளைகளில் விலையுயர்ந்த துணிகளை விற்றுப் பணமாக்குகிருன். அப்படித் திரட்டிய ரொக்கத்தையும் வஞ்சகமின்றித் தன் தலைவனிடம் ஒப்படைக்கிருன். இப்படியும் உலகில் ஒரு மனிதன் இருப்பானுவென்று ஆச்சரியப்படுகிறேன்.

காசி வாசி 4: அஃதிருக்கட்டும். அவன் மனைவி சந்திரமதி அந்த காலகண்ட ஐயன் வீட்டில் என்ன பாடுபடுகிருள் தெரியுமா? அதிகாலையில் படுக்கையைவிட்டெழுந்ததிலிருந்து நள்ளிரவு படுக்கப்போகும் வரையில் என்னென்னவிதத்தில் அந்த வீட்டு அம்மா அவளிடம் வேலை வாங்குகிருள்! அந்தக் கல்நெஞ்சம் படைத்தவர்கள் கஷ்டப்படுத்தி வேலை வாங்குகிருர்கள்; ஆனுல் அந்தப்பெண் பாலோ சிறிதேனும் முகவாட்டம் கொள்வதில்லை. முக மலர்ச்சியோடு ஓடியோடி அவர்கள் கொடுக்கிற வேலைகளைச் செய்கின்ருள். அவர்கள் கொடுப்பதற்குமேல் இன்னும் வேலை செய்வதற்கு ஆயத்தமாய் இருப்பவள் போன்று தென்படுகின்ருள். இந்தப் பூவுலகில் இப்படியும் ஒரு பெண் பிறக்கக் கூடுமா என்று நான் பிரமிக்கிறேன்.

காசிவாசி 1: அதெப்படியோ இருந்து போகட்டும். கணவனும் மனைவியும் இப்படி ஊருக்கு உழைப்பதையே தங்கள் தொழிலாக வைத்துக் கொண்டு எக்கேடோ கெட்டுப் போகட்டும். அந்தப் பொடிப்பையன் தேவ

தாஸனைப் பற்றி நினைக்கும் பொழுதுதான் என் நெஞ்சம் உருகுகின்றது. இராஜகுமாரனாகப் பிறந்தான். இப்பொழுது என்னென்னவோ கலைகள் கற்கவேண்டிய பருவம். ஆனால் அஃதொன்றுமில்லாது அந்த காலகண்ட ஐயனுக்குக் கையாளாக அவன் அலைந்து திரிவதைப் பார்க்கும் பொழுதெல்லாம் என்நெஞ்சம் கொதிக்கிறது.

காசிவாசி 2: ஒரு மனிதன் சத்திய கீர்த்தியாக இருக்க வேண்டுமென்பது வாஸ்தவந்தான். ஆனால் அதற்காகத் தன் நாடு நகரையெல்லாம் யாரோ முனிவர் ஒருவருக்குத் தூக்கிக் கொடுத்துவிட்டு இப்படிக் கபோதிகளாக அலைந்து திரிவது பைத்தியக்காரத்தனம் என எனக்குத் தோன்றுகிறது.

காசிவாசி 3: நீ அவனைப் பைத்தியக்காரன் என்று நினைக்கிறாய். ஆனால் அவனுடைய செயலில் பைத்தியக்காரத்தனம் ஏதாவது புலப்படுகிறதா? விதி விதி என்று உலகம் வருந்துகிறது. அவன் கொஞ்சமாவது வருந்துகின்றானா? அல்லது அவனை ஒரு நெஞ்சழுத்தக்காரன் என்றாவது சொல்லமுடியுமா? அவன் போக்கு என்ன என்று எனக்கே புலப்படவில்லை.

காசிவாசி 4: இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்திற்கு ஏதேதோ நாடுகளிலிருந்து என்னென்னவோ பாங்குடைய மக்கள் எத்தனை யெத்தனையோ பேர் வந்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஹரிச்சந்திரனைப் போன்றும் சந்திரமதியைப் போன்றும் மதிகெட்டு வந்தவர்களை நாம் இதுவரையில் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை. சொன்ன சொல் தவறாதிருப்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவனது சொந்த நலத்துக்காக இருக்கவேண்

டும். ஆனால் இந்த மனிதனே வம்பை இழுத்துத் தலை மீது போட்டுக்கொண்டு படாதபாடு படுகிறான். இவன் ஓர் அசல் பைத்தியக்காரன்.

காசிவாசி 1: இவன் தன் அறிவையே அடகு கொடுத்து விட்டானா! அல்லது அறிவு என்பதற்குப் புதிய விளக்கம் ஏதாவது கொடுக்க வேண்டுமா? இது ஒன்றுமே எனக்கு விளங்கவில்லை.

காசிவாசி 2: சரி. அதெல்லாம் இருக்கட்டும். உலகின் போக்கு முழுதையும் யார்தான் அறிந்துகொள்ள முடியும்? வாருங்கள், நம் அலுவலைப் பார்க்க நாம் போவோம்.

காட்சி 14

இடம்: காசி

(துறவியர்களுக்கிடையில் சம்பாஷணை)

சந்நியாசி 1: காசி க்ஷேத்திரத்தின் சரித்திரத்திலேயே இது ஒரு புதுமை. இது ஆராய்ச்சிக்குரிய ஒரு பெரிய விஷயமாகும்.

சந்நியாசி 2: பகவான், தாங்கள் எதைப்பற்றிப் பகர்கிறீர்கள்? இப்பொழுது இந்தக் காசி க்ஷேத்திரத்தில் அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் ஹரிச்சந்திரனையா குறிப்பிடுகிறீர்கள்?

சந்நியாசி 3: அல்லற்பட்டுக்கொண்டிருக்கும் ஹரிச்சந்திரன் என்கின்றீர்களே, அவன் அல்லல்படுபவனாகவா தங்களுக்குத் தென்படுகின்றான்?

சந்நியாசி 4: தியானத்தில் அமர்தற்கு அடிக்கடி நான் ஸ்மஸானத்திற்குப் போகிறேன். இந்த ஹரிச்சந்திரனைப் பார்க்கும்பொழுதெல்லாம் நான் பெருவியப்பு அடைகின்றேன். இவனுடைய மனநிலை முமுக்ஷுக்களால் ஆராய்தற்குரியதாகும்.

சந்நியாசி 1: அதுமட்டுமல்ல. துறவு என்பதற்கே சரியான விளக்கத்தை நம்மில் யாரும் இதுவரை கண்டிலோம். நாம் துறவியர்களா அல்லது இந்த ஹரிச்சந்திரன்தான் உண்மையான துறவியா என்னும் ஐயம் அடிக்கடி என் மனதில் தோன்றுகிறது.

சந்நியாசி 2: அதென்ன பகவானே, அப்படிப் பெரும் போடாகத் தூக்கிப்போடுகின்றீர்கள்! அவ்வளவு பெரிய சிறப்பு அந்த ஹரிச்சந்திரனிடமிருக்கிறதா?

சந்நியாசி 3: சிறப்பு ஒன்றுமில்லை என்று துணிந்து சொல்ல பகவானே, தங்களுக்கு இயலுமா? எதற்காக நாம் சந்நியாசம் பூண்டிருக்கிறோம்? அதைச் சற்று எடுத்து விளக்குங்கள். பார்க்கலாம்.

சந்நியாசி 2: பிரபஞ்சத்திலிருந்து வருகிற துன்பத்தைத் தவிர்க்க நாம் துறவறம் பூண்டிருக்கின்றோம்.

சந்நியாசி 3: சரி, நான் இப்பொழுது தங்களிடம் கேள்வியொன்று கேட்கிறேன். துன்பத்தைத் தவிர்க்க முயலுகின்றவன் துறவியா? துன்பத்தை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கின்றவன் துறவியா?

சந்நியாசி 4: ஆஹா! மிக நன்று, மிக நன்று. ஆராய்ச்சிக்குரிய பெரிய கேள்வியொன்றை பகவானே, இப்பொழுது கேட்டுவிட்டீர்கள். பிரபஞ்சத் துன்பத்தினின்று விடுபடுதற்கே நம்மில் பெரும்பான்மையோர்

துறவறம் பூணுகின்றோம். ஆனால் இந்த ஹரிச்சந்திரனோ சத்தியவிரதத்தில் நிலைநிற்கும் பொருட்டு மலைமலையாகத் துன்பம் வரினும் அதைப் பொருள்படுத்தாதிருக்கின்றானே! இவனைத்தான் பெரிய துறவி என்று சொல்லவேண்டும்.

சந்நியாசி 1: 'ககனை கர்மணோ கதி:' என்று கிருஷ்ணபரமாத்மா அர்ஜுனனுக்கு எடுத்து உபதேசித்தார். அதன் மர்மம் இப்பொழுது ஓரளவு விளங்குகிறது. 'கர்மத்தின் போக்கைச் சரியாக அறிந்துகொள்ள யாரே வல்லவர்!' என்பது யோகேசுவரனுடைய கூற்று ஆகும். நாம் சந்நியாசம் ஏற்றிருப்பது கர்மத்தின் ஒரு போக்கு. ஹரிச்சந்திரன் சத்திய விரதம் பூண்டிருப்பது கர்மத்தின் மற்றொரு போக்கு. ஹரிச்சந்திரனுடைய தியாகத்தைவிட நம்முடைய தியாகம் பெரியதென்று சொல்ல நம்மில் யாரும் துணியமாட்டோம். இதுதான் சிந்தனைக்குரிய விஷயமாகிறது. தியாகம் என்றால் இதுதான் தியாகம். இது ஒரு மனிதனை எங்கு எடுத்துச் செல்லுமோ பொறுமையாகக் காத்திருந்து பார்ப்போம்.

காட்சி 15

இடம்: காலகண்ட ஐயன் வீடு

(சந்திரமதிக்கும் தேவதாஸனுக்குமிடையில் சம்பாஷணை)

தேவதாஸன்: அம்மா, நாம் எப்பொழுதாவது அப்பாவைப் போய்ப்பார்க்க வேண்டுமல்லவா? அவரைப்பற்றிய ஞாபகம் எனக்கு அடிக்கடி வருகிறது. காசியில்தானே அவர் இருக்கிறார்?

சந்திரமதி: ஆம் குழந்தாய், உன் அப்பாவைப்பற்றிய ஞாபகம் எனக்கு எப்பொழுதுமே இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் அவரைப் போய்ப்பார்க்க நமக்கு உரிமையில்லை. அடிமைகளாக நாம் விலைக்கு விற்கப்பட்டவர்களாயிருக்கிறோம்.

தேவதாஸன்: அப்படியானால் இனி நாம் அப்பாவைப் பார்க்கப் போவது ஒருபொழுதும் இல்லையா?

சந்திரமதி: அதெல்லாம் ஈசன் செயல். அது நம் கைவசத்தில் இல்லை. தெய்வம் எப்படித் திருவுளம் கொள்ளுகிறாரோ அப்படித்தான் நமக்கு எல்லாம் வந்து வாய்க்கும்.

தேவதாஸன்: சரி அம்மா, இப்பக்கத்திலுள்ள சிறுவர்களெல்லாம் படிப்பதற்குப் பள்ளிக்கூடங்களுக்குப் போகிறார்களே, நானும் பள்ளிக்கூடத்திற்குச் சென்று படிக்கவேண்டாமா?

சந்திரமதி: மகனே, நீ இப்பொழுது பள்ளியில் படிக்க வேண்டிய பருவத்தில்தான் இருக்கிறாய். ஆனால் அதற்கும் நமக்கு உரிமையில்லை. அப்பா கொண்டிருக்கிற சத்திய விரதத்தின் பொருட்டு இந்தக் கஷ்டதசையை நாம் முழுமனதோடு ஏற்றிருக்கிறோம். உனக்குக் கல்வியே இல்லாது போய்விட்டாலும் அது பெரிய நஷ்டமாய்விடாது. ஆனால் அப்பா பூண்டிருக்கிற விரதத்திலிருந்து நீயாவது நானாவது பிசகுவோமானால் அது அப்பாவே செய்த பிழைக்கு ஒப்பாகும். நாம் உயிரையே இழப்பதாயிருந்தாலும் சரி, சத்திய விரதத்திலிருந்து மட்டும் சிறிதேனும் பிசகலாகாது.

தேவதாஸன் : அம்மா, இடையிடையே எனக்கு ஓர் ஆசை வருகிறது. சாயங்கால வேளைகளில் பள்ளிக்கூடத்திற்குப் போய்வருகிற பிள்ளைகள் எல்லாம் ஓடியாடி விளையாடுகிறார்கள். அவர்களோடு கூடி விளையாட நானும் விரும்புகிறேன். ஆனால் ஓயாது நம் எஜமானனுக்குக் கையாளாக இருப்பதே என் கடமையாகிறது! எப்பொழுதாவது சிறிது நேரத்திற்காவது ஓய்வு ஒழிச்சல் வேண்டாமா?

சந்திரமதி : என் கண்ணே, அதையெல்லாம் கேட்க நமக்கு உரிமையில்லை. விளையாட வேண்டும் என்கிற மனப்பான்மையும் நீ கொள்ளலாகாது. உன்னுடைய திறமைக்கேற்றவளவு நம் எஜமானனுக்கு நீ உழைத்துப் பாடுபடவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் அதுவும் சத்திய விரதத்தினின்று பிசகியது ஆகும். வேலைக்காரர்களாக நாம் ஒருவரிடம் அமர்ந்தான பிறகு, முழு மனதோடு முழு ஆற்றலைக் கையாண்டு நாம் வேலை செய்யாவிட்டால் ஒழுக்கத்திலிருந்து பிசகியவர்களாவோம். சத்தியத்தினின்று பிசகியவர்களாவோம். உயிரைக் காப்பதைவிட அதிகமாக ஒழுக்கத்தைக் காக்கவேண்டும். உயிரைக் காப்பதைவிட அதிகமாக நாம் உண்மையைக் காக்கவேண்டும். நாம் எவ்வளவு வேலை செய்ய முடியும் என்பதைப் பற்றிய உண்மையொன்று இருக்கிறது. அதை யொட்டியே 'இயல்வது கரவேல்' என்னும் கோட்பாடு வந்திருக்கிறது. எதை நாம் செய்ய முடியுமோ அதைச் செய்யாது மறைத்து வைத்தால் நமது திறமையும் நம்மிடமிருந்து மறைந்துபோம். யாருக்குப் பணிவிடை செய்ய இசைந்துகொண்டு நாம் இங்கு வந்து தங்கியிருக்

கிறோமோ அவருக்கு நம்முடைய முழுத் திறமையையும் பயன்படுத்தி வேலை செய்யாவிட்டால் நாம் பொய்யர் ஆகிறோம். பொய்யாக ஒழுகுவதும் பொய்பேசுவது போன்றே பொல்லாததாம். சத்திய விரதம் காத்தற் பொருட்டு நாம் இடையறாது உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மற்ற சிறுவர்களைப் போன்று கல்வி கற்கவும் ஓடியாடி விளையாடவும் உனக்கு வாய்ப்பு ஏற்படவில்லை. ஆனால் சத்தியத்தின் பொருட்டே உன் உயிரைக் கொடுத்துப் பாடுபடும் பொறுப்பு உனக்கு அமைந்திருக்கிறது. ஆதலால் முழு மனதோடு உழைப்பதன் மூலம் உனக்கு எல்லா நலனும் வந்து அமையும். மன உறுதியோடு உன் கடமையைச் செய்துவா.

தேவதாஸன்: சரி அம்மா, அப்படியே முயலுகிறேன்.

காட்சி 16

இடம்: காலகண்ட ஐயன் வீடு

[காலகண்ட ஐயன் கட்டிலில் படுத்துக்கொண்டிருக்கிறார். தேவதாஸன் விசிறி வீசுகிறான். வீசுவதற்கிடையில் அவன் தூங்கி விடுகிறான்.]

காலகண்டன்: அடே சிறுவா, இவ்வளவு சீக்கிரம் உனக்குத்தூக்கம் வந்துவிட்டதா? ஜாக்கிரதை மறுபடியும் தூங்கி விழுந்தால் உனக்கு அடி விழும்.

தேவதாஸன்: இல்லை எஜமானே, தூங்காது ஜாக்கிரதையாக இருக்கிறேன். சரியாக விசிறி வீசுகிறேன்.

(காலகண்ட ஐயன் கண்மூடியிருக்கிறார். தேவதாஸன் தூக்கத்தில் ஆடிக்கொண்டு விசிறி வீசுகிறான்; தன்னை மறந்து காலகண்டன் மீது விழுந்து விடுகிறான்.)

காலகண்டன்: அடே துஷ்டப்பையா; நீ தின்று கொழுத்துப் போயிருக்கின்ருய். எச்சரிக்கையின்றி ஏனடா என்மீது விழுந்தாய் ?

(இவ்வாறு அதட்டிக்கொண்டு ஓர் அடிபோடுகிருர்)

தேவதாஸன்: என்னை மன்னியுங்கள் எஜமானரே, எப்படியோ என்னையறியாது தூக்கம் வந்து விட்டது.

காலகண்டன்: ஜாக்கிரதை இனித் தூங்கினல் பிரம்படி விழும்.

தேவதாஸன்: என்னை மன்னியுங்கள். எப்படியோ என்னை அறியாது தூக்கம் வந்துவிட்டது.

காலகண்டன்: நாளைமுதல் உன் இரவு உணவைக் குறைக்க வேண்டும். அப்பொழுதுதான் தூக்கம் போகும்.

தேவதாஸன்: ஐயோ எஜமானரே, அப்படிச் செய்ய வேண்டாம். பசியில் நான் மயங்கி விடுவேன். என் வேலையை நான் சரியாகச் செய்கிறேன். முதுகில் அடித்தாலும் குறையில்லை. வயிற்றில் அடிக்க வேண்டாம்.

காலகண்டன்: அடே, அதிகப் பிரசங்கம் செய்யாதே. ஜாக்கிரதையாக விசிறி வீசு.

(வீசிக்கொண்டிருப்பதற்கிடையில் தேவதாஸன் கீழே படுத்துத் தூங்கி விடுகிருன். காலகண்டன் எழுந்து சிறுவனைத் தட்டித் தட்டி எழுப்புகிருன்.)

அடே சோற்றுப் பயலே சோம்பேறி எழுந்து நில்லடா.

(தேவதாஸன் தூக்கவெறியில் எழுந்து நிற்கின்ருன்.)

காலகண்டன்: போதும். நீ படுக்கப்போ. நாளை காலையில் பக்கத்து வீட்டு சிறுவர்கள் சிலர் தர்ப்பை கொய்துவர பக்கத்திலிருக்கும் வனத்துக்குப் போகிருர்

கள். நீயும் அவர்களுடன் சென்று நீ சுமக்கக்கூடிய அளவு ஒரு சிறு சுமை தர்ப்பை கொய்து வர வேண்டும் தெரியுமா?

தேவதாஸன்: உத்திரவுப்படி எஜமானே, அப்படியே செய்கிறேன்.

காலகண்டன்: தூங்கிக்கொண்டு பேசுகிருய். நாளை நீ செய்ய வேண்டிய வேலை என்ன? சொல்லு பார்ப் போம்.

தேவதாஸன்: காலையில் பக்கத்து வீட்டுப்பையன்கள் தர்ப்பை கொய்து வரப்போகிருர்கள். நானும் அவர் களுடனே போகிறேன். என்னுல் சுமக்கக்கூடிய அளவு நல்ல தர்ப்பை கொய்து சுமையாகக் கட்டிக் கொண்டு வந்து சேர்க்கிறேன்.

காலகண்டன்: சரி, இனி படுக்கப்போ.

காட்சி 17

சிவ நாம பஜனை செய்துகொண்டே சிறுவர்கள் தர்ப்பை கொய்யப் போகிருர்கள்.

ராகம்: காபி **தாளம்: ஆதி**

சம்போ சங்கர கெளரீசா—சிவ
சாம்ப சங்கர கெளரீசா. (மூன்று தடவை பாடவும்)

சிறுவன் 1: மழைக்காலம் முடிந்திருக்கிறது. நல்ல தர்ப்பை வனமாக வளர்ந்திருக்கும்.

சிறுவன் 2: ஆம், பெரிய சுமையொன்று கட்டி நான் கொண்டுவரப்போகிறேன்.

சிறுவன் 3: அடியழுந்த அறுப்பதற்கான நல்ல கருக்கு அரிவாள் என் கைவசம் இருக்கிறது.

தேவதாஸன் : அண்ணு, என் கையில் ஆயுதம் ஒன்று மில்லை. புல் அறுத்து எனக்குப் பழக்கம் இல்லை. உனது அரிவாளை எனக்கு கொஞ்சம் இரவல் தா. நான் அறுத்தது போக போதாதற்கு நீ கொஞ்சம் தர்ப்பை அறுத்து எனக்கு உதவி செய்வாயா? நான் கொஞ்ச மாகக் கொண்டு போனல் என் எஜமானன் கோபித்துக் கொள்வார்.

சிறுவன் 3: அடே தேவதாஸா, கவலைப்படாதே. நீ சுமக் கக்கூடிய அளவு நான் உனக்குத் தர்ப்பை அறுத்துத் தருகிறேன்.

(தர்ப்பை கொய்கிருர்கள். தேவதாஸனை நாகஸர்ப் பம் தீண்டுகிறது.)

தேவதாஸன் : ஐயோ அம்மா, பாம்பு கொத்திவிட்டது.

(என்று கத்திக்கொண்டே மயங்கி கீழே விழுகிருன். மற்ற வர்கள் திகைத்துப் பார்க்கிருர்கள், தேவதாஸன் மடிகிருன்.)

சிறுவன் 1: ஐயோ! என்னடா இது பெரிய விபத்து! நம் மோடு வந்த இச்சிறுவன் இப்படி ஆபத்துக்காளாய் விட்டானே !

சிறுவன் 2; அடே, நாம் எட்ட நிற்போம். பாம்பு புதருக் குள் இருக்கிறது.

சிறுவன் 3: கொஞ்சம் தர்ப்பையைப் போட்டு இவனை மூடிவைத்துவிட்டு ஓடோடிச் சென்று காலகண்ட ஐயரி டம் நிகழ்ந்ததைச் சொல்வோம்.

சிறுவன் 1: ஆம், அதைத்தவிர வேறு வழியில்லை. இப் பிரேதத்தைச் சுமந்து செல்ல நமக்கு இயலாது.

காட்சி 18

இடம்: காலகண்ட ஐயன் வீடு

(காலகண்டனுக்கும் வேலையாளுக்குமிடையில் சம்பாஷணை)

காலகண்டன்: அடே மாதவா, அந்த வேலைக்காரி சந்திரமதி என்ன செய்துகொண்டிருக்கிறாள்?

மாதவன்: எஜமானே, பின்புறம் முற்றத்தில் அவள் பாத்திரங்கள் துலக்கிக்கொண்டிருக்கிறாள்.

காலகண்டன்: பாக்கியிருக்கும் பாத்திரங்களைத் துலக்குதற்கு வேறு ஏதாவது ஒரு வேலைக்காரியை இப்பொழுது நியமிக்கும்படி அம்மா அவர்களிடம் சொல்லு. பின்பு நீ சந்திரமதியிடம் ஒரு விஷயத்தைத் தெரிவி. அவள் மகன் தர்ப்பை கொய்யப்போனவன் காலில் ஏதோ முள் தைத்தோ அல்லது விஷக்கல்லில் மோதியோ கால் வீங்கி நடக்க முடியாது அங்கேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறானும். தர்ப்பை கொய்யப் போன அயல்வீட்டுப் பிள்ளைகள் வந்து இச்செய்தியைச் சொன்னார்கள். சந்திரமதிக்கு அம்மா இப்பொழுதே விடை கொடுக்கட்டும். அவள் அந்த வனத்திற்குச் சென்று தன் மகனைத் தாங்கிப்பிடித்து ஜாக்கிரதையாக அழைத்துக்கொண்டு வரட்டும். காலதாமதம் செய்ய வேண்டாம். மாலை நேரம் வந்துகொண்டிருக்கிறது.

மாதவன்: உத்தரவுப்படி செய்கிறேன் எஜமானே. அந்தச் சந்திரமதி ஒரு நொடிப்பொழுது வீண் நேரம் போக்குவதில்லை. அம்மா அவர்களுக்கு ஒன்றன்பின் ஒன்றாக ஏதாவது வேலையைச் செய்துகொண்டே இருக்கிறாள்.

காலகண்டன்: சரி, இந்த அவசரகாரியத்தை அவள் உடனே கவனிக்கட்டும். (வேலைக்காரன் போகிறான்.)

காட்சி 19

இடம்: வனம்

[தன் மகனைத்தேடி இருளில் சந்திரமதி அலைகிருள்.]

சந்திரமதி: ஆ! அதிவிரைவில் காரிருள் வந்து சூழ்ந்து கொண்டது. பாதையைக் கண்டு பிடிப்பது மிகக் கஷ்டமாய் இருக்கிறது. பகல் வேளையில் பிள்ளைகள் ஒரு மணி நேரத்தில் நடந்து சேரவேண்டிய வனம் இந்த இருளில் நெடுந்தூரமாகத் தென்படுகிறது. ஐயோ, தொலைவில் நரிகள் ஊளையிடும் ஓசை காதுக்கு எட்டுகிறது. என் மகன் எப்படிப் பரிதவித்துக்கொண்டிருக்கின்ருனே தெரியவில்லை. அயோத்தியிலே ஏவலாளர் பலரால் பணிவிடை செய்யப்பெற்று ராஜபோகத்தில் இருக்க வேண்டிய சிறுவன் காப்பாற்றுவார் இன்றி பயங்கரமான காட்டில் தன்னந் தனியனுய் உட்கார்ந்து கொண்டிருக்கிருன். தனித்து வாராது தெளர்பாக்கியம் என்பார்கள் பெரியோர். என்கதி இன்னும் என்னென்ன சிறுமைகளிலெல்லாம் உழலப் போகிறதோ தெரியவில்லை. என்மனம் குழம்புகிறது. மகனே, உன்னை நான் உயிரோடு காண்பனே? கண்டால் உனக்கு ஏற்ற சிகிச்சை செய்கின்ற வசதியான நிலையில் நான் இப்பொழுது இல்லையே! ஈசா! இத்தகைய கஷ்டதசை எங்களுக்கு வந்து வாய்ப்பது முறையா?

(தர்ப்பைக் குவியல்மீது அவளுடைய கால் படுகிறது. கலைத்துப் பார்க்கிருள், மகன் மடிந்து சவமாய்க் கிடப்பதைக் காண்கிருள்.)

சந்திரமதி: ஐயோ மகனே, உன்னைச் சவமாகக் காணவா இங்கு நான் அல்லற்பட்டு ஓடி வந்தேன்! உன் கதி

இப்படியும் ஆகுமா! உயிர் துறக்கும்பொழுது நீ எப்படிப் பதறினையோ! கவனிப்பாரின்றி அனாதையாக உயிர் துறப்பதா உன் கதியாயிற்று?

மானுட வாழ்வும் ஒரு வாழ்வா! மகனே நீ இருக்க வேண்டிய பெருநிலை என்ன! பச்சைக் குழந்தையாயிருக்கும்பொழுதே பிறர்க்கு உன்னை அடிமையாக்கிய பாவி நான். அனாதையாகச் சாகும்படி உன்னை விட்டுவிட்ட பேதை நான். எப்பொழுதாவது உன் தந்தை என்னைச் சந்தித்து என் மகன் எங்கே என்று கேட்டால் அதற்கு நான் என்ன பதில் சொல்லுவது?

ராகம்: வலஜி **தாளம்: ஆதி**

தந்தை தாயை இழந்தேன் தரணியரசிழந்தேன்
சத்தியந்தவருத என் சாமியையும் இழந்தேன்
மைந்தனே கதியென்று வருத்தங்களை மறந்தேன்
மதியாதிருந்தாய் தீங்கு மனதிலென்ன நினைந்தேன்

அடவியில் துணிந்துன்னை யனுப்பினதால் கோபமா
அன்னமில்லாது இங்கு அலைந்ததினல் கோபமா
விடத்தினல் இறந்திட வேதன் செய்த சாபமா
வெய்யோன் குலமழிந்து விட்டதுன்னல் பாபமா

உயிர் வாழ்க்கையில் எனக்குப் பற்று ஒன்றுமில்லை. உன்னைத் தொடர்ந்து இந்த உடலை உகுத்துவிட்டு மரணத்தை ஏற்கும் துணிவு எனக்கு உண்டு. ஆனல் அப்படிச் செய்கிற சுதந்திரம் எனக்கு இல்லை. கால கண்ட ஐயனுக்கு நாம் விலைக்கு விற்கப்பட்டோம். விலையான பிறகு தற்கொலை செய்துகொண்டால் விலைக்கு வாங்கியவரிடம் பொய் பேசியவர் ஆவோம். மறந்தும் நம் வாயில் பொய் வரலாகாது. சத்தியத்தின்

பொருட்டு உன்னைத் துறந்த நான் துயருற்று வாழ்ந்து கிடக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனக்கு உயிரிருக்கும் வரையில் விலைக்கு வாங்கியவருக்கு வஞ்சகம் இல்லாது உழைத்தாகவேண்டும். அப்படி உழைக்காவிட்டால் சத்திய விரதத்தினின்று நான் பிசகியவள் ஆவேன். மகனைப் பிரிந்த துயரம் ஒருபக்கம். தளராது தொண்டு புரியவேண்டிய கடமை மற்றொரு பக்கம். இத்தகைய பரிதாபகரமான நிலையில் நான் வைக்கப்பட்டிருக்கிறேன். இதுவும் உன் சோதனையா? பெண்ணொருத்தி தாங்குதற்கு மேல் துயரத்தை அவள்மீது திணிப்பது பொருந்துமா? மானுட வாழ்க்கையில் வைத்துள்ள பற்றுதல் அல்லவா இத்தனை விதமான பரிதவிப்பில் மக்களை உந்தித்தள்ளுகிறது!

நாமிவனை வைத்துக்கொண்டு எத்தனை நாளிருந்து வருந்தினபோதிலும் ஏனம்மா வருந்துகிறாயென்று கேட்கவாபோகின்றான்? நம்மை விலைகொண்டவரோ அதிகாலையில் வரும்படி உத்தரவளித்திருக்கிறார். அப்படிப் போகாதிருந்தால் சத்தியத்திற்குப் பங்கம். ஆனதால் ஈமம் செய்வோம்.

காட்சி 20

(காலகண்ட ஐயன் வீட்டில் சந்திரமதி)

காலகண்டன் : ஏன் இந்த நள்ளிரவில் வந்து இங்கு இப்படிக் கூப்பாடு போடுகிறாய்?

சந்திரமதி : எங்களைக் காப்பாற்றி வருகிற காவலா, என் அருமைக் குழந்தை தேவதாஸன் மடிந்துபோனான். மகனைப் பறிகொடுத்த மகாபாதகி ஆகிவிட்டேன்.

காலகண்டன் : சரி, இனி அடுத்து ஆவதென்ன? உன் மகன் சடலத்தை என்ன செய்தாய்?

சந்திரமதி : அதை வீதியில் வைத்துவிட்டுத் தங்களைக் காணவந்தேன். இந்த ஆபத்தில் தாங்கள் தான் உதவி புரியவேண்டும்.

காலகண்டன் : உன் மகன் மடிந்துபோனது உனக்கேற்பட்ட நஷ்டத்தைவிடப் பெருநஷ்டம் என்னுடையதாகிறது. அவன் பொருட்டு நான் கொடுத்த கிரயம் வீணாய்ப்போயிற்று. மேலும் உதவி வேண்டுமென்கின்றாய். அவனுக்கு உயிர் கொடுக்க என்னால் முடியுமா?

சந்திரமதி : அந்த சடலத்தை மயானத்தில் வைத்துத் தகனம் செய்யவேண்டியிருக்கிறதே. காசு ஏதும் இல்லாது விறகுக்கட்டை பெறுவது எங்ஙனம்? மயானக் கூலி வேறு கொடுத்தாகவேண்டுமே. அதற்கு வேண்டிய காசு கொடுத்து உதவினால் போதும்.

காலகண்டன் : உங்கள் இருவரையும் விலைக்கு வாங்குதலில் மிகைப்பட்ட பொன்காசுகளை எடுத்து விரயம் செய்துவிட்டேன். அதற்கேற்ற பிரதிபலனை நான் இன்னும் பெற்றவன் அல்லன். சாதாரண சம்பள ஆள் வைத்திருந்தால் இந்தப் பெரு நஷ்டம் எனக்கு ஏற்பட்டிராது. நஷ்டத்திற்கு மேல் நஷ்டமா? காசு ஒன்றும் தரமாட்டேன். உன் காரியத்தை நீ பார்த்துக்கொள்.

சந்திரமதி : தேவா, ஆபத்துக் காலத்தில் உதவி புரிவது பெரும் புண்ணியம். லாப நஷ்டங்களைப் பற்றி ஆபத்திலிருப்பவர்களிடம் பேசுவது முறையன்று. மகனை இழந்த துயரத்தில் நான் மதியிழந்தவளாகத் தவிக்கிறேன். தகனச் செலவிற்காகச் சிறிது பொருளுதவி செய்யும்படி பரிந்து விண்ணப்பிக்கிறேன்.

காலகண்டன் : அநாதைகளுக்குத் தகனக் கிரியை எதற்காக? மடிந்து போன உன் மகனது சடலத்தை எடுத்து கங்கையில் போட்டுவிட்டு வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கு விடிவதற்கு முன்பு ஓடிவா. ஒரு தம்பிடி தரமாட்டேன். பணம் மரத்தில் காய்க்கிறதா என்ன? போ. உடனே உன் மகனுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடமையை முடித்துவிட்டு வா.

காட்சி 21

இடம் : மயானம்

சந்திரமதி : இதோ ! அல்லற்பட்டுக்கொண்டு எப்படியோ மயானத்துக்கு என் மகனைத் தூக்கிக் கொண்டு வந்து சேர்த்து விட்டேன். ஆங்காங்கு சுடலைத் தீயின் ஒடுங்கிய வெளிச்சம் தென்படுகிறது. என் மகனைத் தகிப்பதற்குப் புதிய விறகு வாங்க கையில் காசில்லை. அத்தகைய ஏழையாய் விட்டேன். காலகண்ட ஐயன் சொன்னபடி பிரேதமாய்க் கிடக்கும் என் பிள்ளையை கங்கையில் போட நான் எங்ஙனம் துணிவேன்? பெற்றவள் யாருக்குத்தான் அத்தகைய பொருந்தாத மனநிலை வரும்?

ஆங்காங்கு பிணம் எரிந்து எஞ்சிக்கிடக்கிற கொள்ளிக்கட்டைகளையும், சுள்ளிகளையும்பொறுக்கிக் குவித்து என்பிள்ளையின் சடலத்தை சுடலைத் தீக்கு இரையாக்குகிறேன். நான் படும் துயரத்தில் பங்கேற்க எனக்கு உற்றார்-உறவினர் யாருமில்லை.

நான் அரிய தவம்புரிந்து பெற்ற கண்ணே, உன் பிதாவுக்குக்கூடத் தெரியாமல் உன்னங்கம் மறையப்

போகின்றதா? கயிலை நாதா! நான் கற்புக்குறையாத வளாயிருக்கும் பட்சத்தில் என் கண்மணியைத் தகனிக்கும் விஷயங்களைப்பார்க்கும்படி என் பர்த்தாவுக்கு பிராப்தமாகும்படி உதவிபுரிய மாட்டாயா!

(தீ மூண்டு பாலகன் பிரேதம் தகனமாய்க்கொண்டிருக்கிறது, தோட்டி ஒருவன் வருகிறான்.)

தோட்டி: யார் அங்கு நிற்பது? யாராவது மானுடனா? அல்லது ஏதாவது பேய் பிசாசா?

சந்திரமதி: அபலை, பெண்பால் ஒருத்தி தன்னந்தனியளாக இங்கு நின்று கொண்டிருக்கிறேன்.

தோட்டி: இந்தத் தீயை மூட்டியது யார்?

சந்திரமதி: நான்தான்.

தோட்டி: உனக்கு உத்தரவு கொடுத்தவர் யார்?

சந்திரமதி: யாரும் உத்தரவு கொடுக்கவில்லை.

தோட்டி: பின்பு, என் ஆதிக்கத்திலிருக்கும் இந்த இடத்தில் தீமூட்ட உனக்குத் துணிச்சல் எப்படி உண்டாயிற்று? எதற்காகத் தீ மூட்டினாய்?

சந்திரமதி: நான் ஓர் அனாதை. என் மகன் கூற்றுவனுக்கு இரையாய் விட்டான். அவன் உடலைச் சுட்டுச் சாம்பலாக்குவது நான் அவனுக்குச் செய்யும் இறுதிக் கடன். அதைச் செய்துகொண்டிருக்கிறேன்.

தோட்டி: ஆ! அப்படியா? இந்த இடத்திற்குள் நுழைவதற்கு முன்பு கோடித் துண்டு ஒன்றும், கால் ரூபாயும், வாய்க்கரிசியும் எனக்குச் செலுத்தியான பிறகுதானே நீ உள்ளே நுழையவேண்டும்? நள்ளிரவில் திருட்டுத்தனமாக எப்படி இங்கே நீ நுழையலாம்?

சந்திரமதி: ஐயனே, நான் காசு படைத்தவள் அல்லள். மகனைப் பறிகொடுத்த என்னிடத்து கோடித் துண்டுக்கோ, வாய்க்கரிசிக்கோ வகையொன்றுமில்லை. எனது பரிதாபகரமான நிலையை அறிந்து என்னைவிட்டுவிடு.

தோட்டி: அப்படி உன்னை விட்டுவிட எனக்குச் சுதந்திரம் இல்லை. என் எஜமானனுக்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன். அவருக்குச் சேரவேண்டிய கோடித்துணி, கால் ரூபாய், படியரிசி வந்தாகவேண்டும். அதையெல்லாம் உடனே கொண்டுவந்து வை.

சந்திரமதி: ஐயனே, நான் பரம ஏழை. என்னிடத்தில் அஃதொன்றும் இல்லை.

தோட்டி: அஃதொன்றும் இல்லையென்றால் பாதி வெந்தும் வேகாதும் இருக்கிற பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு எங்கேயோ ஓடிப்போ. இந்த இடத்தில் காணிக்கை செலுத்தாது சடலக்கிரியைக்கு அனுமதி இல்லை.

சந்திரமதி: ஐயனே, ஏழைக்கு இரங்கலாகாதா? பரிதவிக்கும் பெண் என்றால் பேய்க்கும் நெஞ்சம் உருகும் என்கிறார்களே! உங்களிடத்துக் கொஞ்சமாவது இரக்கமில்லையா? இந்தச் சிறிய உபகாரத்தை ஓர் அனாதையின் பொருட்டு நீங்கள் செய்யலாகாதா? கையில் காசிருந்தால் உங்களுக்குச் செலுத்தவேண்டிய காணிக்கையைக் கொடுக்காது என் கஷ்டதசையில் உங்களை ஏமாற்ற எனக்கு மனம் வருமா?

தோட்டி: ஆம். நிச்சயமாக நீ என்னை ஏமாற்றுகிறாய்.

சந்திரமதி: ஐயனே, மனம் நொந்துகிடக்கும் இந்தவேளையில் என்னை மேலும் துன்புறுத்தவேண்டாம். நான் ஒருபொழுதும் பொய் பேசுபவள் அல்லள். என்னிடத்துப் பொருள் ஒன்றுமில்லை.

தோட்டி: பொருள் ஒன்றுமில்லை என்கின்றாயே, அது முழுப்பொய். நீ பெரிய வஞ்சகக்காரி.

சந்திரமதி: இல்லை ஐயனே, உங்களைக் கெஞ்சிக் கேட்கின்றேன். பாதத்தைத் தொட்டுப் பிடித்துப் பரிந்து கேட்கிறேன். என்னிடத்துப் பொருள் ஒன்றுமில்லை. நான் ஓர் அனாதைப் பெண். மகனை இழந்து நொந்து கொண்டிருக்கின்ற இந்த வேளையில் மேலும் என்னைத் துன்புறுத்தவேண்டாம்.

தோட்டி: நீ பொய் பேசும் வஞ்சகக்காரி என்று நான் புள்ளி விவரத்துடன் உனக்கு நிரூபித்துக்காட்டமுடியும்.

சந்திரமதி: நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகமில்லை. நான் இதுகாறும் உங்களிடம் சொன்னது முற்றிலும் மெய். எரிகின்ற தீயில் எண்ணெயை வார்ப்பது போன்று என் துயரத்தை ஐயனே, நீங்கள் மேலும் பெருக்கவேண்டாம். அதைத் தணிப்பது உங்களுக்குப் புண்ணியமாகும்.

தோட்டி: விலையுயர்ந்த இரத்தினம் பதித்த தாலி ஒன்றைக் கழுத்தில் கட்டி வைத்துக்கொண்டு என்னென்னவோ பஞ்சைப்பாட்டும், வறுமைப் பேச்சும், துன்பத் தலைச் சுமையையும்பற்றி விதவிதமாக வருணிக்கின்றாயே! இது உனக்குப் பொருந்துமா? இந்த நகையை விற்று வேண்டிய பணத்தைப் பெற்று இந்தப் பிணத்தைப் பொசுக்குதற்கான கிரியைகளையும் ஒழுங்காகச் செய்து முடிக்கலாமே! அதற்கு நேர்மாறாக நள்ளிரவில் வந்து இந்தத் திருட்டுச் செயல் செய்கின்றாயே, உன்னை ஒழுங்கானவள் என்று நான் எப்படி ஏற்றுக்கொள்வது?

சந்திரமதி: ஆ, அப்படியா செய்தி! இம் மண்ணுலகில் பெண்ணாய்ப் பிறக்கும் தௌர்பாக்கியம் பெற்றுள்ள

நான் எத்தனை யெத்தனையோ துயரங்களை அனுபவித் தாய்விட்டது. எவ்வளவோ கஷ்டங்களுக்கு ஆளாய் விட்டேன். சோதனைகளுக்கு உட்பட்டுக் கிடக்கின் றேன். இவையாவையும் மன உறுதியுடன் சமாளித்து வந்திருக்கின்றேன். எனக்கு ஒழுக்கம் உயிரினும் பெரிது. ஒழுக்கத்தினின்று இம்மியளவாவது பிசகியிருப்பதாக நான் அறியேன். ஆனால் நான் பிசிகியிருக்கிறேன் என் பது இப்பொழுது தெற்றென நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நான் கற்பரசியாயிருக்கும் பரியந்தம் கணவன் என் கழுத்தில் பூட்டிய மாங்கல்யம் யார் கண்ணுக்கும் தென் படாது என்னும் வரப்பிரசாதத்தைப் பெற்றிருந்தேன். அந்த வரம் போய்விட்டது. ஒழுக்கம் எப்படியோ எனக்குத் தெரியாது கைநழுவிப் போய்விட்டது. பிணம் சுடும் இந்தத் தோட்டியின் கண்ணுக்கு என் தாலி தென் பட்டான பிறகு இனியா நான் உயிர் வாழ்ந்திருப்பது! ஈசா! உன்னை நினைந்து, உன் நாமத்தை ஓதி இதோ பிராணனை விடப்போகிறேன்.

தோட்டி: தாயே, சற்றுப் பொறுங்கள். நீங்கள் யார்? உங்கள் வரலாறு என்ன? அதை எனக்கு எடுத்துச் சொல்லலாகாதா?

சந்திரமதி: நான் சௌபாக்கியம் படைத்திருந்தபொழுது அயோத்திக்கு அரசியாயிருந்தேன். சத்திய விரதம் காத்தல் பொருட்டு என் கணவர் ஹரிச்சந்திரரால் நானும், இப்பொழுது பிணமாய்க் கிடக்கும் என் பால கனும் அடிமைகளாக விலைக்கு விற்கப்பட்டோம். அந்த இழிநிலையிலும் நெறிபிறழாது நான் வாழ்ந்து வந்தேன். மகனை இழந்த பிறகு நெறிதவறியவள் எனவும் இப் பொழுது நிரூபிக்கப்பட்டிருக்கிறேன். ஆதலால் இந்த உடல் வாழ்க்கை இனி எனக்கு வேண்டாம்.

தோட்டி: அம்மா, நீங்கள் நெறிபிறழக் கிடையாது. அதை நான் நிரூபிக்க முடியும்.

சந்திரமதி: இல்லை, நான் நெறிவழுவியவள் ஆய்விட்டேன். என் தாலியானது தோட்டியாகிய உனக்குத் தென்பட்டது அதற்கு அத்தாக்ஷி ஆகும்.

தோட்டி: இல்லை, உங்கள் தாலி அதைக் கட்டியவனுக்குத்தான் இப்பொழுது தென்பட்டுக்கொண்டிருக்கிறது. கணவனைத் தவிர வேறு யாருக்கும் அது தென்படுகிறதில்லை என்று நான் உறுதி கூறுகின்றேன்.

சந்திரமதி: ஆ! என் எதிரே நிற்பவர் யார்?

தோட்டி: பிராண சகீ, உன்னை மணந்த மணாளன் ஹரிச்சந்திரன் உன் முன்னிலையில் நிற்கின்றான்.

சந்திரமதி: ஆ! மகனை இழந்தது போதாது என்று என் கணவனை வேறு இந்தக் கோலத்தில் காண்பதற்காகவா இத்தனைநாள் நான் வாழ்ந்திருந்தேன்? கணவன் கதி இப்படியானதை முன்னிட்டு இதோ உயிர் துறக்கின்றேன். சிவ சிவ சங்கர மஹாதேவா!

(வீழ்ந்து சாகிறாள்.)

ஹரிச்சந்திரன்: சத்திய விரதத்தினின்று நான் இதுகாறும் இம்மியளவும் பிசகியது கிடையாது. என் கண்ணெதிரே அருமை மகனும் மனைவியும் பிணமாய்க் கிடக்கின்றனர். இனி, எனக்கு உலகவாழ்வு எதற்காக? இதோ நானும் என் சத்திய விரதத்தின் வலிவைத் துணையாகக் கொண்டு சத்திய சங்கல்பனைப் பிராணத் தியாகம் பண்ணுகின்றேன்.
சங்கர மஹாதேவா!— (வீழ்ந்து மடிகிறான்.)

(பார்வதி பரமேசுவரன் பிரசன்னமாகி கங்கை நீர் தெளிக்கின்றனர். மூவரும் உயிர்பெற்று எழுகின்றனர்.)

உமாதேவி : சத்தியத்தினின்று சிறிதும் பிறழாதிருக்கும் உங்கள் மூவருக்கும் மீண்டும் உயிர் கொடுத்துள்ளோம்.

பரமசிவன் : இன்னும் சிறிது காலம் வாழ்ந்திருந்து செங்கோல் செலுத்தி, சத்தியத்தின் மகிமையை மேலும் நிலைநாட்டியபின் நம் திருவடி வந்து சேர்வீர்களாக.

(விஸ்வாமித்திரர் வருகை)

விஸ்வாமித்திரர் : ஹரிச்சந்திரா, உன்னைச் சோதித்தல் பொருட்டு எத்தனை யெத்தனையோ துன்பங்களுக்கு உன்னையும், உன் மனைவியையும், மகனையும் நான் ஆளாக்கினேன். 'சத்தியமேவ ஜயதே' சத்தியமே வெல்லுகிறது என்பதற்கு நீ நல்லதோர் எடுத்துக் காட்டாகிறாய். உனது ராஜ்யத்தையும், செல்வத்தையும் இதோ திருப்பிக் கொடுத்துவிட்டேன். நீ பட்ட கடன்களை நீக்கிவிட்டு நன்கு நாடாளுவாயாக.

தேவேந்திரன் : முனிசிரேஷ்டரே! தேவலோகத்தில் காணமுடியாத முன்னேற்றத்தை இப்பூவுலகில் ஹரிச்சந்திரன் மூலம் காண்கின்றேன். விஸ்வாமித்திரரைப் போன்று பெருவிரதம் பூண்டு நன்னெறியில் முயற்சி செய்து வெற்றியும் கண்ட ஹரிச்சந்திரனைக் குறித்துப் பெருமகிழ்வு அடைகிறேன்.

வசிஷ்டர் : விஸ்வாமித்திரரே! இப்பொழுது தோல்வி உங்களுடையது என்பது தெரிகிறதல்லவா?

விஸ்வாமித்திரர் : ஆம். முனிசிரேஷ்டரே! நெருக்கடியிலும், கஷ்ட தசையிலும், ஆபத்து வேளையிலும் ஹரிச்சந்திரன் சத்திய விரதத்தில் நின்றவன்தான் என்பதை மனப்பூர்வமாக ஒத்துக்கொள்கிறேன்.

இருவரும் : ஹரிச்சந்திரா! நீ, சகல சௌபாக்கியங்களுடன் நீடூழி வாழ்வாயாக.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய மிகச் சிறிய நூல்கள்

மாணுக்கன்	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிருர்களா?	...	1-25
சைவன் யார்?	...	1-25
ஆலய வழிபாடு	...	1-25
ஆத்ம சக்தி	...	1-25
மனிதனது நிஜ சொரூபம்	...	1-25
சிவதத்துவம்	...	1-25
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
கணபதி	...	1-00
நன்நெறிகளும் அருள் வாக்குகளும்	...	0-80
சூரிய நாராயணன்	...	0-75
தெய்வீக மகிமைகள்	...	0-75
முருகக் கடவுள்	...	0-75
வர்ணுச்ரம தர்மம்	...	0-70
தாயுமான சுவாமி ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
விஷ்ணு தத்துவம்	...	0-50
விவேகானந்தரின் வீரகர்ஜனை	...	0-40
கந்தர் அனுபூதி	...	0-30

விவரங்களுக்கு:

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115

தபோவனத் தொடர் 78

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115
திருச்சி ஜில்லா

விலை ரூ. 2-00